# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்

CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 10
செய்தி 10
ஜுன் 2022
விலை ரூ 10/-




## மத்திய அமைப்பின் ராமநாதபுரம் கிளையின் ஆண்டு பேரவை



## மத்திய அமைப்பின் தருமபுரி கிளையின் ஆண்டு பேரவை



# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**ஜூன்2022**


**உள்ளே....**


- ★ சலுகைகள் பறிப்பு வீறுகொண்டு எழுவோம்
- ★ வர்க்க ஒற்றுமையை உயர்த்திப் பிடிப்போம்
- ★ மின்வாரிய செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மை தேவை
- ★ எப்படியிருந்த நிர்வாகம்
- ★ மின்வெட்டுக்கு காரணம் என்ன
- ★ எங்கே கருணை
- ★ நவீன தாராளமயக் கொள்கையும் கார்ப்பரேட் முதலாளிகளும்
- ★ உழைக்கும் பெண்கள் அகில இந்திய மாநாட்டுமுடிவுகள்
- ★ இழந்ததை பெற பெற்றதை இழக்காமலிருக்க ஒன்றிணைவோம் வாரீர்
- ★ கிளை பேரவைகள்.....



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# சலுகைகள் பறிப்பு வீறுகொண்டு எழு! போராட்ட பாதையை வகு! முன்னேறு...

**“காலுக்குச் செருப்புமில்லே**
**கால் வயிற்றுக்குக் கூழுமில்லே**
**பாழுக்கு உழைத்தோமடா -என் தோழனே**
**பசையற்று போனாமடா”**

- என்றார் ஜீவா

சுதந்திரத்திற்கு முன்பு உழைப்பாளிகளின் நலன்கள் வெள்ளையர்களால் பறிக்கப்பட்ட போது தோழர் ஜீவாவின் பாடல்கள் இன்றைக்கு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் கடந்தும் முன்பிருந்த நிலைமைக்கே தொழிலாளி வர்க்கம் தள்ளப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசும், மாநில அரசும் இலவசங்களையும் இதர சலுகைகளை ஒரு பக்கம் அளிக்கின்ற போது மாநில அரசு மறுபக்கம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத்துறை ஊழியர்களின் போராடிப்பெற்ற சலுகைகளை பறிக்கிறது.

கடந்த மூன்றாண்டுகளாக கொடிய தீய கொரானா தொற்று நோய் பரவலைக்காட்டி, நிதி நிலைமை மோசமடைந்தாக கூறி போராடிப்பெற்ற சரண் விடுப்பையும், பஞ்சப்படியையும் பறித்து விட்டார்கள். ஒன்றிய அரசு பஞ்சப்படியை வழங்கியும் மாநில அரசுகளுக்கு வழங்கமனமில்லை.

தமிழக மின்வாரியத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்ட ஊழியர்கள்,பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் ஆகியோரை வாரிய நிர்வாகமும்,

தமிழக அரசும் கண்டு கொள்வதில்லை. அரசின் கேந்திரமான பொதுத்துறை நிறுவனமான மின்வாரியத்தில் 52,000 காலிப்பணி இடங்களை நிரப்ப மனமில்லை. பணிச்சுமையோடு பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் தரமறுப்பு. பொது வருங்கால வைப்பு நிதியும், அனுமதி அளித்து 5 மாதங்கள் கடந்த பின்பு தான் காசு பெறும் நிலை தொழிலாளிக்கு, வெட்கக்கேடு! பணியாற்றிய ஒப்பந்த ஊழியர்களுக்குகூலி வழங்க ஒப்பந்தகாரர்களுக்கு தொகை வழங்க தேவையற்ற கால தாமதமாம் 4% முதல் 7% வரை கமிஷனாம். இந்த தாமதத்திற்கு காரணமும் புரியவில்லை. வளர்ச்சிக்கு உழைத்த ஒப்பந்த தொழிலாளியின் உழைப்பையும் சுரண்டுகிறது.

ஆண்டுகள் ஒன்று கடந்த பின்பும் முந்தைய ஆட்சியாளர்களின் நிலையிலேயே மின்வாரியம் செயல்படுகிறது எனப்து கவலையளிக்கிறது. மின்வாரியம் தனது மின் உற்பத்தியை முழுமையாக செய்யாமல் தனியாரிடம் அதிக விலைக்கு வாங்கும் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்தாலே மின்வாரியத்தின் செலவீனத்தை கட்டுப்படுத்த முடியும். ஆனால் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ. 22/- மற்றும் ரூ. 30/-க்கு அல்லவா அவசர தேவைக்கு வாங்குகிறது.

**பொழுதெல்லாம் எமது செல்வம்**

**கொள்ளை கொண்டு போவதோ!**

என்றார் மகாகவி பாரதியார்

ஒரு பக்கம் காலிப்பணியிடங்களை நிரப்பாமல் அதன் மூலம் இலாபம் பார்க்கும் வாரியம் பணியாற்றும் ஊழியர்களின் சலுகைகளையும், உரிமைகளையும் பறித்து தனியாரிடம் மின்சாரம் வாங்குவதற்கு அதிக செலவும் செய்கிறது.

ஒன்றிய அரசு அறிவித்த 3 சதவீத பஞ்சப்படியும் இல்லை.சரண் விடுப்பு இல்லை, போனசும்10சதவீதம். இது போதாதென்று மின்வாரிய நிர்வாகம் வாரிய ஆணை இரண்டின் மூலம் வீடுகட்டும் முன் பணம் கல்விகடன், வாகனகடன் என அனைத்து சலுகைகளையும் தன் பங்குக்கு பறிக்கின்றது.

**தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!**

என்ற பட்டுக்கோட்டையின் வரிகளுக்கேற்ப,

**எதுவும் தானாய் மாறாது, வர்க்கத்தை திரட்டுவோம்!**

**இழந்ததை பெற, பெற்றதை இழக்காமலிருக்க**

**ஒன்றிணைந்து நிற்போம்!**

**இணைந்து நிற்போம்!**



மே-30 சிஐடியு அமைப்பு தினம்

# வர்க்க ஒற்றுமையை உயர்த்திப் பிடிப்போம்!

**வி. குமார்**
உதவி பொதுச் செயலளார் / மாநில சிஐடியு

இந்திய தொழிற்சங்கஅரங்கில் 50 ஆண்டு களுக்கு முன்னால் சிஐடியு தோன்றிய நாளிலிருந்தே தொழிலாளிவர்க்கம் சந்தித்து வந்த பொதுவான பிரச்சனைகளுக்காக ஒன்றுபட்டதொரு இயக்கத்தை உருவாக்குவதில் முக்கியமான பங்கினை சிஐடியு வகித்துள்ளது. இந்த காலப் பகுதியில் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காக வாதாடும்-போராடும் முன்னணிப்படை என்ற பெயரையும் சிஐடியு பெற்றுள்ளது. சிஐடியுவின் அமைப்புச்சட்டமானது ஸ்தாபனத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை மிகச் சரியாக வே விவரித் துள்ளது. தொழிலாளர்களின் அன்றாடக் கோரிக்கை களுக்காகப் போராடும் அதே நேரத்தில் சமூக மாற்றத்துக்காக தொழிலாளி வர்க்கத்தை தயார்படுத்தும் பணியையும் மேற் கொண்டுள்ளது. முதலா ளித்துவச் சுரண்டல் முறையை முற்றிலுமாக ஒழித்துக் கட்டாமல் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையில் நிலையான மேம்பாட்டை ஏற்படுத்த முடியாது என்பதை சிஐடியு உறுதியாக நம்புகிறது.

சிஐடியு தனது அமைப்புச் சட்டத்தில் கீழ்காணும் வகையில் தெளிவாக குறிப் பிட்டுள்ளது: "உழைக்கும் வர்க்கம் சுரண்டப் படுவதை ஒழிக்க அனைத்துவிதமான உற்பத்தி விநியோகம் மற்றும் பரிவர்த்தனையை சமூகமயமாக்குவதும், சோசலிச அரசை நிறுவுவதன் மூலமே முடியும் என்று சிஐடியு நம்புகிறது. சோசலிச லட்சியத்தை உறுதியாகப் பற்றியி ருப்பதுடன், அனைத்துவிதமான சுரண்டல்களிலிருந் தும் சமூகத்தை முழுமையாக விடுவிக்க சிஐடியு முனைந்து நிற்கும்."

## கடந்து வந்த பாதை

சிஐடியு உருவாக்கப்பட்ட உடனே நடைபெற்ற ஒன்றுபட்ட போராட்டங்களில் மிக முக்கியமானது 1974ம் ஆண்டில் நடைபெற்ற ரயில்வே தொழிலாளர்களின் அகில இந்திய வேலை நிறுத்தம் ஆகும். இந்த வேலை நிறுத்தம் ஒட்டுமொத்த இந்திய உழைக்கும் வர்க் கத்தையும் கிளர்ந்தெழச் செய்தது. மனிதாபிமானமற்ற அடக்குமுறைகளையும் பழி வாங்கல் நடவடிக்கை களையும் எதிர்கொண்டு 20 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தம். நாடுதழுவிய ஒன்றுபட்ட போராட்டத்திற்கு ரயில்வே தொழிலாளர்க ளை ஒன்றுதிரட்டுவதில் சிஐடியு சங்கமும் முக்கியப் பங்காற்றியது. வரலாற்று சிறப்புமிக்க இவ்வேலை நிறுத்தத்தை வழிநடத்தும் ரயில்வே தொழிலாளர்களின் போராட்டத்திற்கான அகில இந்திய ஒருங்கிணைப் புக்குழுவில் ஐஎன்டியுசி யைத் தவிர அனைத்து பிரதான மத்திய

தொழிற்சங்கங்களும் இடம் பெற்றிருந்தன. அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தில் ஜனநாயக உரிமைகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளையும், தாக்குதலையும் எதிர்த்து சிஐடியு வலுவாக போராடியது. சர்வதேச தொழிலாளர் அமைப்பில் (ஐஎல்ஓ) புகார் அளித்து, தொழிற்சங்க உரி மைகள் மீது அரசு தொடுக்கும் தாக்குதலை அம்பலப் படுத்தியது. அவசரநிலைக் காலத்தில் போனஸ் 8.33 சதவீதத்தை 4 சதவீதமாக குறைத்ததை எதிர்த்து உறுதியான - விடாப்பிடியான போராட்டம் நடத்தியதின் விளைவாக மறுபடியும் 8.33 சதவீதம் போனஸ் என்றுசட்டமானது.

## 1982 எழுச்சி

மத்தியில் 1978-ல் ஜனதா கட்சி அரசு கொண்டு வந்த தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்கும் தொழில் உறவு மசோதாவை தயாரித்த போது, அனைத்து தொழிற்சங்கங்களும் தேசியக் கருத்தரங்கு நடத்தி நாடாளுமன்றம் நோக்கி மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதால், அச்சட்டத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டது. 1981ல் நடைபெற்ற பம்பாய் கருத்தரங்கில் தேசிய தொழிற் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு (The National Campaign Committee of Trade Unions) உருவாக்கப்பட்டது. முதன் முதலாக அனைத்து தொழிற்சங்க இயக்கத்தின் கூட்டு பொதுவேலைநிறுத்தம் இந்தியாவில் 1982 ஜனவரி 19ல் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகளையும் எழுப்பியது.இந்தப் போராட்டத்தில் சிஐடியு முக்கியப் பங்கு வகித்தது.தொழிலாளி- - விவசாயத் தொழிலாளி,விவசாயி உட்பட 10 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் பலியாகினர். இதை நினைவு கூரும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 19ஐ தொழிலாளி - விவசாயி ஒற்றுமை தினமாக சிஐடியு கடைப்பிடித்து வருகிறது. பொதுத்துறை தொழிற்சங்கங்களை ஒன்றுபடுத்தி பொதுத்துறை சங்கங்களின் குழு அமைப்பதில் ‘ஒன்று பட்ட மேடையை உருவாக்குவதில் சிஐடியு முன்னணிப் பங்கு வகித்தது. சிபிஎஸ்டியு பதாகையின் கீழ் பொதுத் துறை தொழிலாளிகள் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்க ளின் பொதுத்துறை தனியார்மய நடவடிக்கைகளை போராடிப்பெற்ற உரிமைகள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்தினர். தற்போதைய மோடி ஆட்சியில் இந்த அச்சுறுத்தல்கள்மேலும் பல மடங்கு கூடியி ருக்கிறது. இது மத்திய பொதுத்துறை சங்கங்களை மேலும் பலப்படுத்தவேண்டிய - தேவையை அரசின் நடவடிக்கைகளை முறியடிக்கக்கூடிய வகையில் போ ராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டியதன் தேவையை உணர்த்துகிறது.

## 21 பொது வேலை நிறுத்தங்கள்

உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் (ஐஎம்எப்) இவற்றின் உதவியோடு சர்வதேச நிதி மூலதனம், உலகமயம் என்று அறியப்படும் கட்டமைப் புச் சீரமைப்புத் திட்டத்தை உருவாக்கியது. 1990-91ல் ஏற்பட்ட அந்நியச் செலவாணி நெருக்கடியின் காரண மாக உலக வங்கி சர்வதேச நிதி ஆணையம் விதித்த நிபந்தனைகளை ஏற்று அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொள்ள அரசு கடன்வாங்கியது. இந்த நிபந்த னைகளை ஏற்றதால் இந்தியப் பொருளாதாரம் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்தது. கட்டமைப்பு சீரமைப்புத் திட்டத்தால் தொழிலாளி வர்க்கமும் தொழிற் சங்கங்களும் பல்வேறு விதமான சவால்களை சந்திக்க நேர்ந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து 1991 நவம்பர் 29ல் முதல் பொது வேலைநிறுத்தம் நடை பெற்றது. நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டம் ஒன்றுபட்ட போராட்டங்களின் ஒரு புதிய அத்தியாயத்தை துவக்கியது. அடுத்தடுத்து வந்த பத்தாண்டுகளில் தொடர்ச்சியான நாடு தழுவிய பொது வேலை நிறுத்தங்களும், துறைவாரியான எண்ணற்ற வேலை நிறுத்தங்களும் நாசகரக் கொள்கை களுக்கு எதிராக நடந்தன. தொழிற் சங்கங்களின் ஸ்பான்சரிங்

கமிட்டி மற்றும் வெகுஜன அமைப்புகளின் தேசிய மேடை நாடு தழுவிய பல பொது வேலைநிறுத்தங்களை நடத்தியது. இப்படிப்பட்ட விரிவான தொழிற்சங்க மேடைகளை உருவாக்குவதில், பொது வேலைநிறுத்தத்தை வெற்றிபெறச் செய்வதில் சிஐடியு முன்னணிப் பாத்திரம் வகித்து வருகிறது. 2009ம் ஆண்டு முதல் முறையாக ஐஎன்டியுசி உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் கூட்டு மேடையில் இணைந்தன. 2014ல் மோடி அரசாங்கம் அமைந்த பிறகு கூட்டியக்கத்திலிருந்து பி.எம்.எஸ். விலகிக் கொண்டது. இதுவரை 21 நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடை பெற்றுள்ளன. இதில் இந்த ஆண்டு மார்ச் 28-29 தேதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். கிட்டத்தட்ட 25 கோடி தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதுடன், எளிய சாதாரண மக்கள் தங்களது பரவலான ஆதரவை இதற்கு அளித்தனர்.

## புதிய சவால்கள்

பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தளர்ந்ததன் விளைவாக; தினக்கூலி, ஒப்பந்தமுறை, அவுட்சோர்சிங், தற்காலிக குறைந்த கால வேலை ஆகியவை: கடுமையாக அதிகரித்தன் விளைவாக வேலையின் தரமும் பாதுகாப்பும் வீழ்ந்துவிட்டது. தொழிலாளர் சட்டங்கள். முதலாளிகள் விரும்பும் வகையில் திருத்தப் படுகின்றன. இதனால் பெருமளவுக்கு தொழிலாளர் சட்ட மீறல்கள் நடந்து வருகின்றன. மூலதனப் பங்குகளை விற்பதும், குறைப்பதும் உள்ளிட்ட தனியார்மய நடவடிக்கை மூர்க்கத் தனமாக அமலாக்கப்படுவதால் பொதுத்துறைகள் சீர்குலைக் கப்படுகின்றன. சமூக நீதியுடனான பொருளாதார வளர்ச்சிக் கேள்விக் குறியாக உள்ளது. உற்பத்திச் செலவை வெட்டுவது என்கிற பெயரால் தொழிலா ளர்களின் சமூகப் பாதுகாப்பின் மீது கடுமையான தாக்குதல் தொடுக்கப்படுகிறது. பாரம்பரியத் தொழில்களிலும், சிறுதொழில்களிலும் ஏராளமாக அந்நிய மூலதனம் ஊடுருவியதால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் வர்க்கத்தின் தொழிற்சங்க உரிமைகள் மீது கொடியத் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்த உரிமை பறிக்கப்படுகிறது.

## மோடி அரசின் நேரடித் தாக்குதல்

மோடி அரசாங்கம் தேசியச் சொத்துக்களை விற்பது என்கிற தனது எண்ணத்தை எவ்வித முகமூடியும் அணி யாமல் மேற்கொண்டு வருகிறது. ‘‘அரசாங்கத்திற்கு வியாபாரம் செய்வது வேலையில்லை, வியாபாரத்தில் அரசாங்கத்திற்கு எவ்வித இடமுமில்லை’’ என பாஜக அரசு கூறுகிறது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு கார்ப்பரேட் நிறு வனங்களுக்கு சேவகம் செய்வது என்ற ஒற்றைக் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது. தனியார் மயம் மட்டு மல்ல, வேளாண் சட்டங்களாகட்டும், அந்நியநேரடி முதலீட்டு கொள்கையாகட்டும், நிலக்கரி போன்ற மிக முக்கியமான தாதுப்பொருட்களை எளிய முறையில் விற்பனைக்கு ஏற்றவாறு மாற்று வதாகட்டும்; மோடி அரசாங்கத்தின் அனைத்து பொருளாதார கொள்கைகளும் பிற்போக்கானவை. பொதுமக்களுக்கு சேவை புரிந்து வரும் பொது சுகாதாரம், ரயில்வே, மின்சாரம் போன்ற துறைகளிலும் தனியார் கார்ப்பரேட் ஆதிக்கம் செலுத்தும் வகையில் சட்டங்களை திருத்துகிறது. மக்களை தனியார்மயமாக்கல் கொள்கைக்கு எதிராக திரட்ட வேண்டிய கடமை சிஐடியுவிற்கு பிரதானமாக உள்ளது.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியது சிறு-குறு தொழில் களாகும்.பெரிய கார்ப்பரேட்களுக்கு சாதகமான கொள்கைகள் இந்த துறைக்கு சாவுமணி அடித்துள் ளது.பல்லாயிரக்கணக்கான சிறு-குறு நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன.இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளார்கள். இதுவும் முதலா ளித்துவ நெருக்கடியை சமாளிக்க இந்திய முதலாளித் துவம் மேற்கொள்ளும் வழிதான். ஆட்சியதிகாரத்தில் இருக்கும் எதேச்சதிகார வலதுசாரி அரசாங்கத்தைப் பயன்படுத்தி தனது லாபத்தை பெருக்கிக் கொள்ள தொழிலாளர்களைச்

சுரண்டுவது மட்டுமல்லாமல் சிறு-குறு நிறுவனங்களையும் வணிகங்களையும் அழிப் பதன் மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இந்திய முதலாளித்துவம் கடுமையாக முயற்சிக் கிறது. இதுவரை காணாத பணவீக்க உயர்வு காரணமாக, கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங் களிலும் நுகர்வு குறைந்துள்ளபோதிலும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மிகவும் கவலைக்குரிய அம்சமாகும். எரிபொருள் விலையில் ஏற்படும் கட்டுப்படுத்தப்படாத விலைஉயர்வு பிற பொருட்களின் விலை உயர்வுக்கு முக்கியக் காரணியாகும்.

விலைவாசி உயர்வு தானாக நடப்பதில்லை என்ற உண்மையை நாம் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டி வருகிறோம். வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள தங்க ளது எசமானர்களுக்கு சேவை செய்வதற்காகவே ஆளும் அரசால் நடத்தப்படும் சுரண்டல் திட்டத்தின் ஒரு பகுதியே விலைவாசி உயர்வு ஆகும். தனியார்மயமாக்கல் நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்பை மக்களுக்கு விளக்கி, தனியார் மயமாக்கலை எதிர்த்த போராட்ட நடவடிக்கைகளில் மக்களை திரட்டும் கடமையை சிஐடியு மேற்கொள்கிறது. அனைத்துச் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு முடிவுகட்டும் நோக்கத்துடன் தொழிலாளி வர்க்கம் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களையும் ஒன்றி ணைக்கும் நோக்கத்துடன் உதயமான சிஐடியு, உழைக் கும் வர்க்க ஒற்றுமையை நிலைநிறுத்த; கார்ப்பரேட் மதவாத கூட்டை தோற்கடிக்கும் இந்தப் போராட்டத்தில் எப்போதும்போல் முன்னணியில் இருக்கும் என உறுதியளிக்கிறது.வகுப்புவாத கார்ப்பரேட் கூட்டு மற்றும் அவர்களின் மதவெறி முயற்சிகளை தோற்கடிக்க, அனைத்து பிளவுவாத சக்திகளுக்கு எதிரான போராட் டங்களையும் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்ல சிஐடியுவின் அமைப்பு தினத்தில் சபதம் ஏற்போம்.



சென்னை வடக்கு வட்டத்தின் சார்பாக தோழர் எஸ். பஞ்சரத்னம் அவர்களின் நினைவு கல்வெட்டு பொன்னேரி கோட்டத்தில் 12.05.2022 அன்று 33.11.. கே.வி. துணை மின்நிலையம் கும்மிடிப்பூண்டியில் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் திறந்து வைத்தார்.




சென்னை பொதுகட்டுமான வட்டத்தின் சார்பாக தோழர் எஸ். பஞ்சரத்னம் அவர்களின் நினைவு கல்வெட்டு 6.5.2022 அன்று TLC பூந்தமல்லி கோட்ட அலுவலகம் முன்பு மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் திறந்து வைத்தார்.

# மின் வாரிய செயல்பாடுகளில்

# வெளிப்படைத் தன்மை தேவை!

தமிழ்நாடு மின்சார வாரியம் 01.07.1957-ல் உருவான காலத்திலிருந்து மின் உற்பத்தி திட்டங்கள் மின் உற்பத்தி, மின் விநியோகம், ஆகியவற்றின் வெளிப் படைத்தன்மை இருந்து வந்தது.

நாளடைவில் மின்சார வாரியம் பொன் முட்டையிடும் வாத்தாக ஆளும் வர்க்கத்திற்கும், அதிகார வர்க்கத்திற்கும் மாறியது. மின் உற்பத்தி திட்டங்களில் தேவைக்கு ஏற்ப மின் உற்பத்தி செய்யாத காரணத்தால் அறிவிக்கப்படாத மின் வெட்டாக தமிழகம் மாறியது. புதிய பொருளாதார கொள்கை மற்றும் மின்சார சட்டம் 2003-ன் தாக்கம் மின் உற்பத்தியில் தனியார் ஈடுபட்டார்கள்.

ஆளும் அரசுகளும்,அதிகாரிகளும் மின்சாரத் தட்டுப்பாட்டை கணக்கில் கொண்டு மின்சாரத்தை தனியாரிடமிருந்து அதிக விலைக்கு கொள்முதல் செய்ய தொடங்கி னார்கள். இதன் பின்னர் தமிழகத்தில் மின் உற்பத்தி திட்டங்கள் ஆமை வேகத்தில் செயல்பட துவங்கியது. கடந்த பத்தாண்டு களில் உற்பத்தி திட்டங்களை முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதில் மின்வாரியமும்,தமிழக அரசும் கவனம் செலுத்தவில்லை. விளைவு திட்ட மதிப்பீடு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அடக்க விலை தனியாரிடமிருந்து கொள்முதல் செய்வதைக் காட்டிலும் விலை அதிகரித்தது.இதில் பலரும் பயன் அடைந்தனர்.

பதவி உயர்வுகளுக்கும், இடமாற்றங் களுக்கும் விலை பேசப்பட்டது. இதனால் நேர்மையான பணியாளர்கள் பாதிக்கப்பட்டனர். காலங்கள் மாறியும் காட்சிகள் மாறவில்லை.

தளவாட பொருட்கள் கொள்முதல் செய்வதிலும் பொருட்களின் தரமும் கேள்விக்கனைகளாகவே இருக்கிறது. தரமற்ற மீட்டர்கள், கொள்முதல் செய்வதால் மின் ஊழியர்கள் (களப்பணியாளர்) நுகர்வோர் மத்தியில் தேவையற்ற வாக்கு வாதங்கள் உருவாகிறது.இது மின் வாரியத்தின் மீது பொது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை சிதைக்கிறது. தனியார் நிறுவனங்கள் போட்டிச் சந்தையை உருவாக்கியதால் அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் மின் அளவீடு செய்யும் கருவி (மீட்டர்)உற்பத்தியை நிறுத்தியது.

அதே போல் முக்கிய தளவாடப் பொருட்களும் இன்சுலேட்டர்கள் பியூஸ் ஒயர் உள்ளிட்டவைகளின் தரம் கேள்விக்குறியாகி விட்டது.பழுதுகள் அடிக்கடி ஏற்பட்டு மின் தடையும் ஏற்படுகிறது.பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக பணிகளை விரைந்து செய்ய ஒருங்கிணைக்க முடியவில்லை.

மின் உற்பத்தி நிலையங்களில் நிலக்கரி உள்ளிட்ட மூலப்பொருட்கள் கொள்முதல் செய்வதிலும், வருகின்ற நிலக்கரியை அளவீடு

செய்யவும், ஏற்பாடு இல்லை. கொள்முதல் செய்யும் இடத்தில் மஃபியா கும்பலின் அச்சத்தில் பணியாளர்கள் சென்று வர வேண்டியுள்ளது. மின் உற்பத்தி நிலையங்கள் 25 ஆண்டுகளுக்கு மேலானவை என்பதால் அதை நவீனப் படுத்துவதற்கு பதிலாக உற்பத்தியில் ஏற்படும் புகையாக வெளிவரும் துகள்களை தடுக்க 39 கோடி ரூபாய் செலவில் ஆயிரம் மீட்டர் நீளத்தில் 14 மீட்டர் உயரத்தில் Dust Screen அமைக்க திட்டமிடுகிறது.

பொது மக்களின் பணத்தை வீணடிக்க செய்கின்ற ஏற்பாடல்லவா! கடந்த 20 ஆண்டுகளாக தமிழகத்தை ஆண்ட அரசுகள், அதிகாரத்தில் இருந்த அதிகாரிகள் இவர்களுடைய தவறான நடவடிக்கையின் காரணமாக உருவாகிய செலவுகள் தான் வாரியத்தின் நட்டத்திற்கு காரணம். வாரிய வருவாயில் பெரும்பகுதியை மின்சார கொள்முதலுக்கு செலவு செய்யும் வாரிய நிர்வாகமும், தமிழக அரசும் இதை முறைப்படுத்த வேண்டுமென்ற தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்க மறுப்பது ஏன்?

தமிழகத்திற்கு தேவையான மின்சாரத்தை தனியார் முதலாளிகளிடம் கொள்முதல் செய்யத் துவங்கினால் பெருமுதலாளிகள் அவர்களுக்குள் சிண்டிகேட் அமைத்து மின்சார தட்டுப்பாட்டை உருவாக்குவார்கள். தமிழக மின்சார வாரியம் மின்சாரத்தை கேட்கும் பொழுது கூடுதல்விலைக்கு விற்க முன்வருவார்கள்.இது மேலும் மின்வாரியத்தை நிதிச்சுமைக்கு இட்டுச்செல்லும்.இதனால் தமிழகம் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்படலாம்.

எனவே தான் வெளிப்படைத் தன்மையோடு மின்வாரிய நிர்வாகம் மின் உற்பத்தி திட்டங்களை விரைந்து முடிப்பதும், அதற்கு பின் தேவைக்கேற்ப மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கு குறைந்த விலையில் நீண்டகால ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதே தீர்வாக இருக்கும்.

## இலங்கையின் சீரழிவுக்கு தாராளமய பொருளாதாரம் தான் காரணம்!

இலங்கையின் சில பத்தாண்டு களுக்கு முன்பே பொருளாதார தாராளமயம் தொடங்கி விட்டது. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக இருக்கும் என்ற நம்பியதன் அடிப்படையில் ஒப்பிட்டளவில் இலவச இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை அனுமதித்தது. ஆனால் தற்போது ஏற்றுமதி செய்வதை விட அதிகமாக இறக்குமதி செய்கிறது. கொரானா தொற்று நோயால் சுற்றுலா வருவாய் பாதிக்கப் பட்டதோடு எளிதாக கடன்களை பெற முடியாத நிலையும் இலங்கை அரசுக்கு உருவானது.

அந்நியச் செலவாணி கையிருப்பு நெருக்கடியால் அத்யாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அது மின் வெட்டு வரை நீடிக்கிறது.

கோத்தபய ராஜபக்ஷே நிர்வாகம் தாராளமய சந்தை பொருளாதாரத்துடன் தொடர்ந்து செயல்பட்டது.இது நாடு எதிர் நோக்கும் பிரச்சனைகளை அதிகப் படுத்தியது. இதுவே தற்போது அரசாங்க எதிர்ப்பு போராட்டங்களுக்கு வழி வகுத்துள்ளது.

ஐ லாண்ட இணைய இதழுக்கு
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
பொதுச்செயலாளர் ஜீ. வீரசிங்கா
அளித்த பேட்டியிலிருந்து.....

## இந்திய ரூபாய் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி!

அமெரிக்கா டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத அளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த 2022-ம் ஆண்டு மே 7-ந்தேதி டாலருக்கு இணையாக 77 ரூபாய் 48 காசுகளாக அதிகரித்துள்ளது.




தமிழகம் முழுவதுமுள்ள களப்பணி ஊழியர்கள், நிர்வாகப்பிரிவு, கணக்குப்பிரிவு மற்றும் பொறியாளர்களுக்கான ஊர் மாற்றம், பதவி உயர்வு, தெளிவுரை அளிப்பது பல்வேறு பணிகளை செய்கின்ற ஒரு முக்கியமான தலைமையகத்தின் நிர்வாகப் பிரிவாகும். சுருங்கச் சொன்னால் மின்சார வாரியத்தின் இதயம் போன்றது தலைமையக நிர்வாகப்பிரிவாகும். மின்வாரிய உத்தரவு களை நன்கு படித்து புரிந்து அதே போன்று நிலை ஆணைகள் மற்றும் பணி விதிகக்ளை அறிந்து புரிந்து தெளிவுரை வழங்க வேண்டியது நிர்வாகப்பிரிவின் கடமை யாகும்.

சமீபகாலமாக நிர்வாகப் பிரிவினு டைய செயல்திறன் என்பது 20 ஆண்டு களுக்கு முன்பு இருந்ததை போல் இல்லை. தொழிற்சங்கம், நிர்வாகம், அரசு மூன்றும் இணைந்து போடப்பட்ட ஒப்பந்தத்தை அமலாக்கம் செய்கின்ற வாரிய உத்திரவு களை, இவற்றை முழுமையாக படித்து புரிந்து தெளிவுரை வழங்குவது இல்லை. இதற்கு எண்ணற்ற உதாரணங்கள் கூற இயலும். உதாரணமாக ஒப்பந்தத்தில் புதிய கொள்கை முடிவுகளை எடுத்தால் அதை பணி விதிகளில் (Service Regulations) திருத்தம் செய்வது கிடையாது. பணி விதிகள் தான் மின்வாரிய ஊழியர்கள், அதிகாரிகள், பொறியாளர்களின் கொள்கை கோட்பாட்டு புத்தகம். நீதிமன்றம் இதன் அடிப்படையில் தான் தீர்ப்புகளை வழங்குகிறது. பணி விதிகளில் திருத்தம் செய்யாத காரணத்தினால் எண்ணற்ற நீதின்ற வழக்குகளை வாரியம் சந்தித்து வருகிறது. இதனால் மின்வாரியத்திற்கு கணக்கில் அடங்காத பண விரயம், நிர்வாகத்தின் நேர விரயம், உழைப்பு விரயம் உதாரணமாக வணிக ஆய்வாளர்களில் இருந்து, இளமின் பொறியாளர் 2-ம் நிலை கொடுப்பது சம்மந்தமான நீதிமன்ற வழக்கு, நுண் கருவி கம்மியர் ( Instrument Mechanic Case) வழக்கு போன்றவை.

மின் வாரியத்தின் கொள்கை முடிவு களை, நிலையான விதிகளை, பணி விதிகளை பின்பற்றி மாநிலம் முழுவது முள்ள மண்டல, வட்ட நிர்வாகங்கள் செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்கின்ற கடமை நிர்வாகப்பிரிவுக்கு உண்டு. அதை செய்கின்றதா என்ற பெரிய கேள்வி நமக்கு எழுகிறது. வட்ட, மண்டல நிர்வாகங்கள், புதிய பணி நியமனங்களில் பணி நியமனம் செய்யும் அதிகாரம் (Appointing Authority) இல்லாத போது ஏற்படும் பல்வேறு சந்தேகங்களுக்கு தெளிவுரை

கேட்பது வாடிக்கையான ஒன்றாக மாறி விட்டது. உதாரணமாக 2007-ம் ஆண்டு ஒப்பந்த ஊழியர்களில் இருந்து மஸ்தூராக பணி நியமனம் பெற்றவர்களுக்கு விடுப்பு, உள்ளிட்ட சலுகைகளை உள்ளனவா? என்று கேள்வி எழுப்பி தெளிவுரை கேட்கப்பட்டு அனைத்து சலுகைகளும்உண்டு என்று தெளிவுரை வழங்கப்பட்டது.

மின்வாரியம், தொழிற்சங்கம், அரசு மூவரும் இணைந்து 10.08.2007 ஒப்பந்தம் மூலமாக ஒப்பந்த ஊழியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். இந்த ஊழியர்களுக்கு ரூ.2570/- அடிப்படை சம்பளமும் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் உண்டா? என்று வட்ட நிர்வாகங்கள் தெளிவுரை கேட்டது என்பது தவறானதாகும். அதற்கு நிர்வாகப் பிரிவும், கொடுக்கலாம் என்று தெளிவுரை வழங்கியது. நம்மைப் பொறுத்த வரையில் நிலையாணை விதிகளுக்கு உட்பட்டு வருகின்ற அனைத்து தொழிலாளிக்கும் அனைத்து சலுகைகளும் பொருந்தும். இதுவே சட்டமாகவும் இருக்கின்ற பொழுது சந்தேகங்களும், சந்தேகத்திற்கு தெளிவுரை வழங்குவதும் விந்தையிலும் விந்தையாக உள்ளது. அதனால் தான் தொழிலாளர்கள் உரிமையை பெறுவதற்கும் அமலாக்கம் செய்வதற்கும் காலதாமதமாகிறது. அதே போல சமீபத்தில் ஒரு உதாரணத்தை சொல்ல முடியும். 2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கேங்மேன் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். 2000-ம் ஆண்டு வாரிய கூட்டத்தில் வைத்து முழுவாரிய உத்தரவாக வெளியிடப்பட்டு அவசர அவசரமான பணி விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது. இவர்களுக்கும் தற்போது விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் உண்டா? என தெளிவுரை கேட்கப்பட்டு வாரிய தலைமையகத்தில் கோப்பு சுற்றி சுற்றி வருகிறது.

தொழிலாளர் நல சட்டத்தின் அடிப்படையில் 240 நாட்கள் தொடர்ச்சி யாக வேலை செய்த எந்த பணியாளரும் நிரந்தர பணியாளராக கருத வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அதே நேரம் மின்வாரியத்தில் ஆரம்பநிலை நிரந்தர பணிக்கு கேங்மேன் என்ற புதிய பெயரிட்டு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் உண்டா? என கேட்பது அந்த கோப்பை சுற்றிசுற்றி வர வைப்பது விந்தையிலும் விந்தையான ஒன்று. வாரிய தலைமையகத்தில் இது போன்ற எண்ணற்ற தெளிவுரைகள் மின் வட்டங்களிலிருந்து கேட்பதும், அந்த கோப்புகளை மின்வாரிய தலைமையகத்திற்கு ஏற்புடையதல்ல.

மின் வாரியம் பல்வேறு வகையான மாற்றங்களை செய்ய வேண்டும் என முனைப்பு காட்டி வரும் சூழ்நிலையில், ஊழியர்கள், அதிகாரிகள், பொறியாளர்கள் ஆகியோர்கள் நலன்கள் தொடர்பாக தெளிவுரை வழங்குவதற்கு வேகம் காட்டிட வேண்டும். மாற்று வடிவத்தையும் கண்டிட வேண்டும்.அப்போது தான் நீதிமன்ற வழக்குகளை தடுப்பது மட்டுமல்ல உழைப்பையும் நேரத்தையும், மின்வாரியத் தின் பொருளாதாரத்தையும் வீணடிக்காமல் பாதுகாக்க முடியும்.

இதை செய்யுமா மின்வாரிய நிர்வாகம்?

**- தி.ஜெயசங்கர்**

## வேகமாக அதிகரிக்கும் விலைவாசி!

பணவிக்கம் மக்களின் வாங்கும் சக்தியை குறைக்கிறது.இதன் விளைவாக உற்பத்தி பொருட்களை வாங்குவது குறைவதும், அதன் விளைவாக பொருளாதார மந்தம் விளைகிறது.இது வேலை இழப்புக்கும், பொருள் விற்பனை பாதிப்புக்கும் இட்டுச் செல்லும்.



# மின் வெட்டுக்கு காரணம் என்ன?

தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் சில இடங்களில் சில மணி நேரம் மின்வெட்டு, மின்சாரம் அடிப்படை தேவை என்பதால் அவதியுரும் மக்கள் ஆத்திரம் அடைந்து சில இடங்களில் மின்வாரிய அலுவலகங்களையும் மின் ஊழியர் களையும் தாக்கும் துரதஷ்டவசமான அவல நிலை ஏற்பட்டுள்ளதால் இதற்கான காரணங்கள் குறித்து நாம் அனைவரும் விவாதிக்க வேண்டியுள்ளது.

தமிழகத்தின் பொதுவான மின்தேவை 15500 MW, கோடை கால மின் தேவை 17200 மெகாவாட்.. இந்த மின் தேவைக்கு தமிழக மின்வாரியத்தின் 4320 MW நிறுவுத்திறன் உள்ள அனல் மின் நிலையங்களில் இருந்து 3500 MW மின்சாரத்தை பெறுகிறோம். மத்திய தொகுப்பில் இருந்து வழங்க வேண்டிய 7150 MW-ல் இருந்து 4700 MW மட்டுமே பெறுகிறோம்

எஞ்சிய தேவையை 7500 MW தனியாரிடம் இருந்து (LT -1300 MW/ MT- 150 MW/ ST- 2250 MW/ IEX - 2000 MW & Wind, Solar, IPP, CPP, UI - 1800 MW ) கொள்முதல் செய்கிறோம்.. இருப்பினும் நமக்கு 1400 MW பற்றாக்குறை ஏற்படுகிறது.

மத்திய தொகுப்பில் இருந்து வழங்க வேண்டிய மின்சாரம் தோராயமாக 2450 MW வழங்கவில்லை. காரணம் நிலக்கரி பற்றாக் குறையால் மின் உற்பத்தி பாதிப்பு என மத்திய அரசு மின் உற்பத்தி நிலையங்கள் சொல்கிறது. மாநில மின் வாரியங்களின் சுய உற்பத்திக்கு தேவையான நிலக்கரி பற்றாக்குறையால் மின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது,

**நிலக்கரி பற்றாக்குறைக்கு சொல்லும் காரணங்கள்**

அனைத்து மத்திய மற்றும் மாநில மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை மத்திய அரசு அளிக்க உறுதி செய்த பிறகே அந்த மின்நிலையத்தை புதிதாக அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக மத்திய அரசின் கோல் இந்தியா நிறுவனம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நிலக்கரியை முழுமையாக வழங்காமல் 75 % மட்டுமே வழங்கி வந்தது. இருந்தாலும் நிலக்கரி பற்றாக்குறை வரவில்லை..

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா காலத்தில் பணியாள் கிடைக்க வில்லை, மழை காரணமாக நிலக்கரி வெட்டி எடுக்கமுடியவில்லை இதனால் மின் தேவை குறைந்தது, இதனால் மத்திய/ மாநில மின் நிலையங்கள் கோல் இந்தியா நிறுவனத்திடம் நிலக்கரியை குறைவாக கொள்முதல் செய்தன, இதனால் தற்போதைய தேவையை மத்திய அரசால் அல்லது கோல் இந்தியா நிறுவனத்தால் சரியாக கனிக்க முடியவில்லை அதனால் தற்போது நிலக்கரி பற்றாக்குறை என வாதங்களை முன்வைப்பதும், அத்தோடு கோல் இந்தியாவால் தேவையை பூர்த்தி செய்ய, ஏற்கனவே திட்டமிட்ட நிலக்கரி அளவை உற்பத்தி செய்தும் கொண்டுவர போதுமான எண்ணிக்கையில் ரயில் பெட்டிகள் இல்லை என சொல்வதும் முரண்பாடானது ஆகும்.

மேலும் மழை,கொரோனா பிரச்சனை யால் நிலக்கரி வெட்ட முடியவில்லை என்றால் அது

அந்தந்த காலத்தில்தான் பிரதிபலிக்கும் அது இப்போது பிரதிபலிக்க வாய்பில்லை,மேலும் நிலக்கரி சுரங்கங்களில் நிலக்கரியை வெட்டி சேமித்து வைத்து பிறகு அதை விநியோகிப்பது கிடையாது, நிலக்கரி சுரங்கங்களில் அவ்வப்போது நிலக்கரியை வெட்டி அவ்வப்போதே விநியோகம் செய்யப்படுகின்றது.

எனவே கொரோனா காலமான கடந்த இரண்டு ஆண்டுகளிளும் மத்திய / மாநில அரசின் மின் நிலையங்கள் கோல் இந்தியாவிடம் கொள்முதல் செய்யும் நிலக்கரி அளவை குறைத்துக் கொள்ளவில்லை மேலும் கோல் இந்தியா திட்டமிடப்பட்ட அளவில் 75% நிலக்கரியை வழங்கியதை எப்போதும் போல மத்திய / மாநில அரசின் மின் நிலையங்கள் பெற்றுவந்தன.

கோல் இந்தியா நிறுவனம் அனை வருக்கும் தேவையான நிலக்கரியை முழுமையாக உற்பத்தி செய்ய கூடிய திறன் இருந்தும்.. நிலக்கரியை மின் நிலையங்களுக்கு கொண்டு செல்ல தேவையான ரயில் பெட்டிகள் இல்லை என்ற பிரச்சனை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருப்பதால்தான் மின்நிலையங்கள் அவர்களுக்கு தேவையான நிலக்கரியில் 75% ஐ கோல் இந்தியாவிடம் பெற்றுக்கொண்டு எஞ்சிய 25% நிலக்கரியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து மத்திய / மாநில அரசின் மின்நிலையங்கள் தனது நிலக்கரி தேவையை நிறைவு செய்து வந்தன.

**நிலக்கரி பற்றாக்குறை வந்தது எப்படி? மின்வெட்டுக்கு காரணம் யார்?**

மத்திய அரசு வெளி நாடுகளில் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய 2020-ல் தடை விதித்து உள்நாட்டு நிலக்கரியை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என உத்தரவிட்டதால் கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாடுகளில் இருந்து நிலக்கரியை மத்திய/மாநில அரசு மின்நிலையங்கள் இறக்குமதி செய்ய முடியாமல் போனது.

வெளிநாட்டில் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய தடை செய்த மத்திய அரசு உள்நாட்டில் நிலக்கரியை வெட்டி எடுத்து ஏற்றுக்கொண்ட முழுமையான அளவு நிலக்கரியை மின்நிலையங்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் மத்திய அரசு அல்லது கோல் இந்தியா நிறுவனம் எப்போதும் போல இப்போதும் வழங்க வேண்டியதில் 75% நிலக்கரியை மட்டுமே வழங்கியுள்ளாதால் தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த இறக்குமதி தடை இரண்டு ஆண்டுகளாக இருந்தாலும், தேவையில் 75% நிலக்கரியை மட்டுமே மத்திய அரசு வழங்கிய நிலையில், இரண்டு ஆண்டுகளாக பற்றாக்குறை பிரச்னை ஏற்படாததற்கு காரணம், இரண்டு ஆண்டுகளாக கொரோனா இருந்த காரணத்தால் மின்தேவை கூடுதல் ஆகாததால் மின்வெட்டு இல்லாமல் சமாளிக்க முடிந்தது.

தடை விதித்ததால் தேவையான எஞ்சிய 25% நிலக்கரியை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய முடியாத நிலையில் மத்திய/ மாநில அரசின் மின் உற்பத்தி நிலையங்கள் முழுவீச்சில் இயங்க முடியாத நிலைக்கு தள்ளி தமிழகம் உள்ளிட்டு இந்திய நாடு முழுவதும் தற்போது மின்வெட்டு ஏற்பட்டுள்ளதற்கு மத்திய அரசு மட்டுமே பொருப்பேற்க வேண்டியுள்ளது.

**மின்வெட்டுக்கு காரணமான மத்திய அரசின் இந்த செயலுக்கு காரணம் அலட்சியமா? அதானியா?**

நிலக்கரியை இறக்குமதி செய்ய இரண்டு ஆண்டுகளாக தடைவிதித்த மத்திய அரசு தற்போது ஆஸ்திரேலியா மற்றும் இத்தாலியில் உள்ள அதானியின் நிலக்கரி சுரங்கங்கள் நிலக்கரி வெட்டி எடுக்கும் பணியை துவங்கியுள்ள நிலையில், தற்போது பிப்ரவரி 2022 இறுதியில் பயன்பாட்டில் 10% நிலக்கரியையும் ஏப்ரல் 2022-ல் மேலும் 10% ஐ கூடுதலாக்கி 20 % நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி அளித்துள்ளது என்ற தகவல்கள் தற்போது வருகின்றது.

நிலக்கரியை இறக்குமதி செய்ய தடைவிதித்த மத்திய அரசு உள்நாட்டு உற்பத்தி யை பெருக்கி தேவையான ரயில் பெட்டிகளை கொடுத்து மின் உற்பத்தி நிலையங்களுக்கு கொண்டு சென்று இருந்தால் இந்த மின்வெட்டு நெருக்கடி ஏற்பட்டு இருக்காது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும்

Indian Energy Exchange (IEX) எனப்படும் இந்திய மின்சார சந்தையில், இந்தியாவில் உள்ள அதானி உள்ளிட்ட தனியார் மின் உற்பத்தி யாளர்கள் இந்த நெருக்கடியை பயன்படுத்தி யூனிட் 4 ரூபாய்க்கு உற்பத்தி செய்த மின்சாரத்தை யூனிட் 25 வரை விற்று கொள்ளை லாபத்தை ஈட்ட மத்திய அரசு உதவியுள்ளது. பலரின் கண்டன குரல் எழுந்த நிலையில் தற்போது 2022 ஏப்ரல் 4 லில் தான் மத்திய அரசு மின்சார சந்தையில் தனியாரால் ரூ.4 க்கு உற்த்தி செய்யப்பட்ட ஒரு யூனிட் மின்சாரத்தின் உச்சபட்ச விலை ரூ.12 என நிர்ணயம் செய்து உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசு ஒரு யூனிட் ரூ.12 என அதிக பட்ச விலையை நிர்ணயம் செய்தால் மாநில மின்வாரியங்கள் அதை வாங்கி மக்களுக்கு எவ்வளவு ரூபாய்க்கு விற்க வேண்டும் என்பதை மத்திய அரசு மக்களிடம் சொல்ல வேண்டும்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அவர்கள் சொல்வது போல் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் IEX மூலம் ஒரு குறிப்பிட்ட மின் உற்பத்தி நிறுவனத்திடம் மின்சாரத்தை வாங்கமுடியாது. கமிஷனுக்காக ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.20 க்கு கூடுதல் விலையில் வாங்கியது போன்ற கருத்தை முன்வைப்பது தவறானது. அதானி உள்ளிட்ட தனியாரின் கொள்ளை லாபத்திற்காக மத்திய அரசின் உத்தரவால் ஏற்பட்ட மின்வெட்டை சமாளிக்க வேறு வழியில்லாமல் மத்திய அரசு மின்சாரத்துக்கு உட்சபச்ச விலையை IEX மூலம் நிர்ணயம் செய்யாத காரணத்தால் 2022 ஏப்ரல் 3 -ம் தேதி வரை மாநில மின்வாரியங்கள் ஒரு யூனிட் ரூ.20 முதல் ரூ25 வரை கொடுத்து வங்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

**மாநில மின் நிலையங்களை நிறுத்தி வைக்க சொல்லும் MOD?**

மின்சாரத்தின் உற்பத்தி அடக்க விலை என்பது அந்த மின் நிலையத்தை அமைக்க செய்யப்பட்ட கட்டுமான செலவை Fixed cost எனவும் மின் உற்பத்தி செய்ய எரி பொருள் மற்றும் இயக்கத்திற்கான செலவை Variable cost எனவும் இரண்டாக வகைப்படுத்தினாலும் இரண்டையும் இணைத்தே அடக்க விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

மத்திய அரசின் Merit Order Despatch (MOD) உத்தரவுபடி மாநில மின்வாரியத்தின் மின் உற்பத்தியின் அடக்க விலை குறைவாக இருந்தும் வெளிமார்கெட்டில் மின்சாரத்தின் அடக்க விலை கூடுதலாக இருந்தாலும் வெளிமார்கெட்டில் தான் வாங்க வேண்டும் எனவும் மாநில மின் உற்பத்தி நிலையங்களை நிறுத்த வேண்டும் என உள்ளது. ஏனெனில் மின்சாரத்திற்கான அடக்கவிலையை பார்காமல் Variable cost ஐ மட்டுமே கணக்கில் எடுத்து மாநில மின் நிலையங்கள் Break down என நிறுத்தப்பட்டு வெளியில் இருந்து கூடுதல் விலையில் கொள்முதல் செய்து மாநில மின் வாரியங்களின் கடன் சுமை மேலும் மேலும் கூடுதலாகிறது. இந்த உத்தரவை மத்திய அரசு திரும்ப பெற்றால்தான் மாநில மின் உற்பத்தி நிலையங்களை சீராக இயக்கி வெளியில் வாங்குவதைவிட குறைவான அடக்க விலையில் மின் உற்பத்தி செய்ய முடியும்.

**மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய மத்திய அரசு**

இந்தியாவில் 20- 21 ல் 1,89,500 MW மற்றும் 21 -22 ல் 2,00,539 MW என்று மொத்த மின் தேவை உள்ளது. ஆனால் மத்திய அரசுக்கு 99,005 MW மற்றும் மாநில அரசுக்கு 1,04,855 MW என மொத்தம் 2,03,855 MW மின் திறன் உள்ள மின் நிலையங்கள் உள்ளன. அதே போல இந்தியாவில் தனியாரிடம் 1,95,637 MW மின் திறன் உள்ள மின் நிலையங்கள் உள்ளன. எனவே இந்தியாவின் தற்போதய மின் தேவை 2 லட்சம் MW எனில் மத்திய மற்றும் மாநில அரசிடம் 2 லட்சம் MW நிறுவுத்திறனும் தனியாரிடம் 2 லட்சம் MW நிறுவுத்திறனும் தேவையை விட கூடுதலாக 100 % உள்ள நிலையில் மின்சாரத்தின் விலை ஒரு யூனிட் ரூ 25 வரை சென்றதை கட்டுப்படுத்த தவறியது ஏன்? தற்போது கூட உச்சபட்ச விலை ஒரு யூனிட்டுக்கு ரூ12 என நிர்ணயித்து கொள்ளை லாபத்திற்கு வழிகுத்தது ஏன்?

இந்தியாவின் தற்போதய மின் தேவையை

விட 100% கூடுதலாக மின் நிறுவுதிறன் உள்ளதால் தனியார் மின் உற்பத்தி செய்து தொழில் நடத்த மத்திய மாநில அரசுகளின் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியை முடக்கிட மத்திய அரசு திட்டமிட்டு நிலக்கரியில் செயற்க்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தியதா? என அடுக்கடுக்கான கேள்விகள் எழுகின்றன.

மக்களை மின் வெட்டில் தள்ளி, கடனில் சிக்கியுள்ள மாநில மின்வாரியங்களை வேறு வழியில்லாமல் தனியாரிடம் கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாய நிலைக்கு கொண்டு சென்று அவைகளை மேலும் கடனில் தள்ளி மின் கட்டண உயர்வை செய்தாக வேண்டும் என்ற நிலைக்கு தள்ளியுள்ளதற்கு மத்திய அரசு மக்களிடம் பதில் சொல்ல வேண்டிய காலம் வெகுதூரம் இல்லை.

**- கே. அருள்செல்வன்**

## தர்மபுரி கிளையின் ஆண்டு பேரவை

28.05.2022 அன்று லெனின் மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கே. ஜெகநாதன் கொடியேற்றினார், காளியப்பன் அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். வி. சீனிவாசன் அனைவரையும் வரவேற்று பேசினார். வேலூர் மண்டலச் செயலாளர் எம். கோவிந்தராஜ் தோழர் எஸ்.பி.ஆர். படத்தை திறந்து வைத்து உரையாற்றினார். மாநில செயலாளர் எம். ஜோதி பேரவையை துவக்கி வைத்து பேசினார். நிறைவாக தோழர் ஆர். சிவராஜ் மாநில செயலாளர் நிறைவுரை ஆற்றினார். தோழர் ஜீவா செயலாளர் அறிக்கையும், தோழர் எம். ஜெயக்குமார் வரவு-செலவு அறிக்கையையும் முன்வைத்தனர். சிஐடியு மாநில செயலாளர் சி. நாகராஜன் சிறப்புரை ஆற்றினார்.

### புதிய நிர்வாகியாக...

தோழர் பி. ஜீவா/தலைவர், தோழர் லெனின் மகேந்திரன்/செயலாளர்,
தோழர் வி. சீனிவாசன்/ பொருளாளர் ஆகியோரை தேர்வு செய்தனர்.

இறுதியாக தர்மபுரி கொலசனள்ளியில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஹட்சன் பால் நிறுவன தொழிலாளர்களுக்கு ரூ. 5,000 நிதியுதவி அளித்தனர்.

## தூத்துக்குடி அனல் மின் நிலைய கிளை மாநாடு

தூத்துக்குடி அனல் மின் நிலைய கிளை மாநாடு 14.05.2022 அன்று தூத்துக்குடி சங்கமனையில் கிளை தலைவர் தோழர் கே.கென்னடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து மாநில செயலாளர் தோழர் எஸ். அப்பாதுரை உரையாற்றினார். தோழர் எஸ்.கணபதி சுரேஷ் வேலை அறிக்கையையும், தோழர் சரவணன் வரவு-செலவு அறிக்கையும் முன்வைத்தனர். மாநாட்டை வாழ்த்தி மண்டல செயலாளர் தோழர் எம். பீர்முகமதுஷா, தூத்துக்குடி மின் விநியோ வட்ட தலைவர் தோழர் மரியதாஸ், TNPEO மாநில செயலாளர் தோழர் ஆனந்தம் மற்றும் மாநிலத் துணைத் தலைவர் தோழர் சந்திரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

நிறைவாக மத்திய அமைப்பின் மாநிலபொதுச்செயலாளர் தோழர் எஸ்.ராஜேந்திரன் நிறைவுரையாற்றினார்.

### புதிய நிர்வாகிகளாக

தோழர் கே. கென்னடி
தலைவர்,
தோழர் எஸ்.கணபதி சுரேஷ்
செயலாளர்
தோழர் சுடலைமுத்து
பொருளாளர்

**துணைத்தலைவர்**

தோழர் எஸ். அப்பாதுரை,
தோழர் மெர்சிநேகன், தோழர்
எம்.கிருஷ்ணகுமார், தோழர் ஏ. பொன்னழகு
தோழர் பி. பொன்செல்வி,
தோழர் எஸ். விஜயன்

**இணைச்செயலாளர்**

தோழர் எம்.கோவிந்தசாமி,
தோழர் ஏ. ஜனார்த்தனன்,
தோழர் சி. முத்துசாமி,
தோழர் எம். அஹம்மது அன்சாரி,
தோழர் எஸ். செல்வி,
தோழர் ஜி.கலாவதி,
தோழர் பி. ஜான் பிரிட்டோ




மின்சார வாரியத்தில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் விபத்து காரணமாக, இயற்கை மரணங்கள் காரணமாக, கொரானா கொள்ளை நோய் காரணமாக இறப்பவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு, தமிழக அரசும், மின்வாரியமும் பொதுவான விதிகளை வகுத்து பணி நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வழங்கப்பட்டு வரும் பணி நியமனங்கள் 2021 ஆண்டு நவம்பர் மாதம் வரையில் சீரான முறையில் வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு பணி நியமன உத்திரவு வழங்குவதில் தேக்கநிலை ஏற்பட்டது. இதற்கு மின்வாரிய நிர்வாகம் என்ன காரணம் சொல்லப்போகிறது.

கருணை அடிப்படையிலான பணி நியமனம் என்ற கருத்தாக்கம் என்பது 40 ஆண்டுகளுக்கு முன்பாக தொழிற்சங்கங்கள் களத்தில் போராடி, நீதிமன்றத்தில் போராடி பெற்ற உரிமையாகும். பணிசெய்யும் மின்வாரிய பணியாளர்கள் தீடீரென இறந்து விடும் போது அவர்களின் குடும்பம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. அவர்களுடைய குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலம் கேள்விக் குறியாகிறது. பல ஆண்டுகள் நிர்வாகத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர் இறக்க நேரிடும் போது அவரின் குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நிர்வாகத் திற்கு உண்டு என்று பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் அளித்ததின் அடிப்படையிலும் பல்வேறு கட்ட போராட்டங்களின் காரண மாகவும் அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தது. அதன் அடிப்படையில் இதுநாள் வரை கருணை அடிப்படையில் வாரிசு நியமனங்கள் பணி நியமன உத்திரவு பெற்று வருகின்றனர்.

மின்வாரியத்தில் வாரிசு வேலை பெறுவதற்கு உள்ள வழிமுறைகளை பின்பற்றி பணி நியமனம் பெறுவதற்கு காலதாமதம் ஆகிறது என்று நிர்வாகத்திடம் முறையீடு செய்து அதிலும் சில மாற்றங்களை செய்து எளிமைப்படுத்தி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. வரவேற்புக்குரிய விஷயமாகும். இதனை தொடர்ந்து வாரிசு வேலை விண்ணப்பங்கள் பிரிவு அலுவலகம் துவங்கி தலைமை பொறியாளர்/ பணியமைப்பு அலுவலகத்திற்கு வந்த பின்பு கோப்புகளை ஆய்வு

செய்து பணி நியமன ஆணை வழங்குவார். அவர் அவ்வாறு வழங்கிய பணி நியமன ஆணைகள் ஐந்து மாதங்கள் கடந்த பின்னரும் உரிய நபருக்கு சார்பு செய்யாமல் மண்டல பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் காலம் தாழ்த்துவது பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஏற்படுத்தும் தீங்காகும். குடும்பத்தலைவனை இழந்த குடும்பம் வறுமையில் வாடுகின்ற பொழுது மின்வாரிய பணிக்கு தேர்வு செய்த பிறகு அவருக்கு சார்பு செய்யாமல் காலம் தாழ்த்துவது என்பது வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதாகும். கருணை அடிப்படையிலான வேலை என்று சொல்லி, கருணை இல்லாமல் நடந்து கொள்ளும் அதிகாரிகளை நாம் போராட்டங்கள் மூலமாகவே சந்திக்க வேண்டும். பணி ஆணையை நான்கு மாதங்களுக்கு மேல் சார்பு செய்யாமல் வைத்திருக்கக்கூடிய ஒரு அதிகாரியை அவர் தனது கடமையை செய்ய தவறிவிட்டார் என்று வாரியம் எளிதாக தண்டிக்க முடியும். ஏன் அவ்வாறு செய்யவில்லை என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தமிழகம் முழுவதும் 150-க்கும் மேற்பட்ட கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் வழங்கப்படாமல் உள்ளது. அவர்களின் குடும்ப வறுமைக்கும், அவர்கள் படும் துன்ப துயரத்திற்கும் வாரியம் காரணமாக இல்லை என்றாலும், வாரிய அதிகாரிகள் காரணமாக உள்ளார்கள் என்ற உண்மை மறுத்துவிட முடியாது. சமச்சீரற்ற சமூகம் அமைந்துள்ள நமது சமூகத்தில் இது போன்ற கருணை அடிப்படையிலான பணி நியமனங்களும், பொருளாதார உதவிகளும் தான் இச்சமூகத்தை இன்றும் உயிர்ப்புடன் வைத்துள்ளது. இது மின்வாரிய அதிகாரிகளும், பொறியாளர்களும் உணர வேண்டும்.

எனவே பணி நியமன உத்திரவுகளை மண்டல மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் காலதாமதம் செய்யாமல் பணி நியமன உத்திரவுகளை வழங்கி மின்வாரியத்தின் நற்பெயரை காத்திட வேண்டும்.

**"செய்யுமா மின்வாரிய நிர்வாகம்"**

**- T.J**

---

## மக்கள் தன்னிகரற்ற தலைவர் தோழர் எம்.என்.எஸ்.வெங்கட்ராமன் காலமானார்!



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினராக இருந்து பணியாற்றிய அருமைத்தோழர் எம்.என்.எஸ். வெங்ட்ராமன் மே1 இரவு 10.45 மணிக்கு மதுரையில் மாரடைப்பால் காலமானார்.தொழிலாளி வர்க்க திருநாளை காலையில் இருந்து கொண்டாடி தேனி மாவட்டம் கம்பத்தில் நடைபெற்ற மே தின பொதுக்கூட்டத்தில் உரையாற்றி பின்பு மதுரை திரும்பிய போது பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சில அடிகள் நடக்கின்ற போது மாரடைப்பால் காலமானார்.மாணவர், விவசாயிகள், தொழிலாளர் போராட்டங்களில் போராளி விருதுநகர் மாவட்டத்தில் தொழிலாளிகளையும், விவசாயிகளை திரட்டுவதிலும், பெண் உரிமைக்கான போராட்டத்திலும் தன்னிகரற்ற மற்றும் அர்ப்பணிமிக்க தோழர் எம்.என்.எஸ். அவர்கள்.

அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கும்,தோழர்களுக்கும் மத்திய அமைப்பு ஆழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறது.

# நவீன தாராளமயக் கொள்கையும் கார்ப்பரேட் முதலாளிகளும்!



கார்ப்பரேட் முதலாளிகள் இந்த நாட்டின் செல்வ ஆதாரங்களை உருவாக்குபவர்கள் அவர்களுக்கு ஆதரவாக நவீன தாராளமயக் கொள்கைகள் உருவாக்கப்படும் என ஒன்றிய பிஜேபி அரசு அறிவித்தது.

செல்வ ஆதாரங்களை உருவாக்கும் இந்த கார்ப்ரேட் முதலாளிகளுக்கு Wealth Creaters என்று பெயர் வைத்தனர். நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களோ ஒரு படி மேல் சென்றுபொருளாதார இரத்த ஊக்கிகள் Economical Blood Bustor என்று கார்ப்பரேட் முதலாளிகளை வர்ணித்தார்.

உண்மையில் இந்த கார்ப்பரேட் முதலாளிகள் இரத்த ஊக்கிகள் அல்ல இவர்கள் இரத்தத்தை உறிஞ்சும் அட்டை பூச்சிகள் என்பது தான் இந்த 8 ஆண்டுகளில் நாம் உணர முடிந்தது.

ஏனெனில் கொரானா தொற்று நோய் காலத்தில் தொழில்கள் நசிந்து போய், தொழிலாளர்கள் வேலை இழந்த சூழலில், முகேஷ் அம்பானி உலகில் பணக்காரர் பட்டியலில் 9வது இடத்தில் இருக்கிறார். சொத்து மதிப்பு சுமார் 7.8 லட்சம் கோடி. ஒரே ஆண்டில் சொத்து மதிப்பு 24 சதவீதம் உயர்வு. அடுத்து இந்தியாவின் 2வது பணக்காரர் கௌதம் ஆதானி (மோடியின் நண்பர்) உலக பணக்கார பட்டியலில் 313வது இடத்தில் இருந்தவர். மோடியின் கருணையில் கொரானா தொற்று நோய் காலத்தில் 12வது இடத்தை பிடித்து விட்டார். கடந்த 8 ஆண்டுகளில் அதானியின் சொத்து 1800 சதவீதம் உயர்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா உலக பணக்கார பட்டியலில் 3வது இடமாம். ஆனால் உலக பட்டினி நாடுகளில் 101வது இடத்தை பிடித்துள்ளது.

இந்திய தேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பாக, அச்சாணியாக செயல்படுபவர்கள். தொழிலாளியும், விவசாயியும் தான். இவர்கள் அசைவு இல்லாமல் ஏதுவும் அமையாது.

இந்திய அரசின் ஆளும் வர்க்கங்கள் யாரை சார்ந்துள்ளது என்று பார்த்தால், பெருமுதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசு, கார்ப்பரேட் முதலாளிகளிடம் நெருக்கம் காட்டி கூட்டு சேரும் அரசு. கடந்த 8 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய் சில நூறு முதலாளிகளுக்கு சலுகை காட்டியுள்ளது. அவர்களை வாழவைத்து அவர்களிடம் தனது எஜமான் விசுவாசத்தை காட்டியுள்ளது மோடி அரசு.

சர்வதேச மூலதனம், முதலாளித்துவ நெருக்கடிக்கு தீர்வாக நவீன தாராள மயத்தை திணிக்கிறது. இது மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண உதவாது என்பதை அறிந்தும் திணிக்கின்ற அரசாக பிஜேபி அரசு உள்ளது.

ஆரம்ப கட்ட கல்வியில் வரலாற்றை மாற்றி ஆர்.எஸ்.எஸ். இத்துத்துவாவுக்கு ஆதரவாக மாற்றி எழுத கல்வியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வரலாற்று உண்மை களை பொய்யாக்கி, மதம், இனம், மொழி ஆகியவற்றை கையிலெடுத்து கலகம் செய்து அச்சத்தை தொழிலாளர்கள் மத்தியில் கொண்டுவர விரும்புகின்றனர்.

நவீன தாராளமய கொள்கையை இந்த தேசத்தில் அமலாக்க ஒன்றிய, மாநில ஆட்சியாளர்கள் முனைந்த பொழுது, அதை எதிர்த்து கடந்த 30 ஆண்டுகளாக உழைக்கும் வர்க்கம் போராடி வருகிறது. ஆகவே தான் ஆட்சியாளர்களால் முழுமையாக செயல்படுத்த இயலவில்லை.

வேலையின்மை, மருத்துவம். கல்வி, சுகாதாரம், பொதுத்துறைகளை பாதுகாக்க இன்றைய தொழிலாளி வர்க்கம் ஒன்று பட்டு நின்று போராட வேண்டிய அவசியம் உள்ளது. நிரந்தரமான பணிகளில் இன்று காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங்,கேஷுவல், தொகுப்பு ஊதியம் என்ற பெயரில் கார்ப்பரேட் முதலாளிகள் இந்திய உழைப்பாளி மக்களின் உழைப்பை சூறையாட ஒன்றிய அரசு அனுமதிக்கிறது.

இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு நாம் செயல்படுவோம்! முன்னேறு வோம்!

-எஸ். ஆர்.

## புதுச்சேரியில் மின்துறை மீண்டும் தனியார் மயத்தை நோக்கி !

புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு மின்சார சட்டத்தின் அடிப்படையில் தனியாரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக போராடி கடந்த பிப்ரவரி 1 முதல் வேலை நிறுத்தத்தை நோக்கி சென்றதன் விளைவாக மின்துறை அமைச்சரும், முதலமைச்சரும் தலையீடு செய்து நடைபெற்ற பேச்சுவார்த் தையில் மக்களிடமும் மின் ஊழியர்களிடமும் கருத்துக்கள் கோரி சட்டமன்றத்தில் விவாதித்து பின்பு தீர்வு காண்போம் என்ற வாக்குறுதி அளித்தனர். போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால் ஒன்றிய அரசின் நிர்பந்தத்தால் பி.ஜே.பி அங்கம் வகிக்கும் அரசு புதுவையில் இருப்பதால் தற்போது அமைச்சரவையில் ஓசையின்றி தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளனர். புதுவையில் மின் ஊழியர்கள் போராட்டத்தை துவக்கியுள்ளனர். புதுவை மின் ஊழியர்களின் போராட்டம் வெல்லட்டும்.



புதுச்சேரி மின்துறையை பாதுகாக்க ஆதரவு கரம் நீட்டுவோம்!

## ஈரோடுமின்உற்பத்தி வட்டக் கிளையின் ஆண்டு பேரவை

29.05.2022 அன்று எல். செல்வநாதன் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைப்பொதுச் செயலாளர் பேரவையை துவக்கி வைத்து பேசினார். மேட்டூர் திட்ட செயலாளர்ல சுந்தரராஜன், சேலம் திட்ட செயலாளர் வி. ரகுபதி, மற்றும் கே. சண்முகம், டி. சிங்கராயன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சேலம் சிஐடியு மாவட்ட செயலாளர் டி. உதயகுமார் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக மத்திய அமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் கே. அருள்செல்வன் நிறைவுரை ஆற்றினார்.

**புதிய நிர்வாகியாக**

தோழர் **பி.கே. சிவக்குமார்**/கிளைத் தலைவர்,

தோழர் **எல். செல்வநாதன்** / கிளைச் செயலாளர்

**எம்.கே. மோகன்** / கிளை பொருளாளர்

# பெண்களின் கோரிக்கை பிரச்சாரத் தோடு
# 2023 மார்ச் 8 தினத்தை
# வெகு ஜன அணிதிரட்டலாய் நடத்துவோம்!
# உழைக்கும் பெண்கள் அகில இந்திய மாநாட்டில் முடிவு!

உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழுவின் அகில இந்திய 12வது மாநாடு பஞ்சாப் மாநிலம் கொல்கத்தாவில் 2022 மே மாதம் 21 ,22 தேதிகளில் ரஞ்சனா நிருலா நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது .

## முதல் மாநாடு

உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் அகில இந்திய முதல் மாநாடு 1979 ஆம் ஆண்டு சென்னையில் துவங்கியது பணிபுரியும் பெண்கள் பிரத்யேக கோரிக்கைகளை முன்வைத்து அதை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் விதத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது .பெண்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாகவே கவனிக்கப் படாமல் இருந்துள்ளது.

உழைக்கும் வர்க்கம் நடத்திய பல. வேலை நிறுத்தங்களில் இயக்கங்களில் உழைக்கும் பெண்களின் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதை உணர்ந்து முதல் மாநாட்டில் பெண்களின் பிரச்சினைகளை கண்டறிந்து கூடுதல் முயற்சியோடு செயல்பட வேண்டிய அவசியத்தை திட்டமிட்டு கொண்டு செல்லப்பட்டது.

## சாதனைகள்

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தப்படும் மாநாடு கடந்த கால அனுபவங்களையும் மாற்றங்களையும் எடுத்துக்கொண்டு பயணிக்கிறது கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அகில இந்திய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழு சமமான ஊதியம் ,பதவி உயர்வில் சமவாய்ப்பு ,மகப்பேறு விடுப்பு, கருக்கலைப்பு விடுப்பு ,மகப்பேறு சலுகைகள் ,குழந்தைகள் காப்பகம், தனியான கழிவறை ,கட்டாய இரவுப் பணி ,பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் போன்ற பிரச்சனைகளில் தலையிட்டு இயக்கம் நடத்தி பெண்களுக்கான சிறப்பு சட்டங்களையும் விதிகளையும் உருவாக்க உறுதுணையாக இருந்துள்ளது

பெண்களுக்கு என்று தனியாக மகளிர் பிரிவு துணை குழுவை அமைத்த இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் சிஐடியு பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணிபுரியும் துறைகளை கண்டறிந்து அவர்களை சங்கமாக அணி திரட்டியதின் மூலம் பெண் உறுப்பினர் எண்ணிக்கை சிஐடியு - வில். அதிகரித்துள்ளது 1979-ல் 6.2 சதவீதமாக இருந்த பெண் உறுப்பினர்கள் 1991-ல் 12



சதவீதமாகவும் ,1998 -ல்17.75 சதவீதமாகும் 2020 -இல் 33.4 சதவீதம் அதிகரித்துள்ளது CITU- வன் பல்வேறு குழுக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது,

இந்தியாவிலேயே பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக புகார் கமிட்டியை உருவாக்கிய( ICC) ஒரே தொழிற்சங்கம் CITU- மட்டுமே!.

## 12-வது மாநாடு

முதல் நாள் மாநாடு சிஐடியு அகில இந்திய தலைவர் தோழர் கே. ஹேமலதா அவர்கள் கொடியேற்றத்துடன் துவங்கியது மறைந்த தலைவர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தி மாநாட்டு அரங்கத்திற்குள் பிரதிநிதிகள் சென்றனர்.

முதல் நிகழ்ச்சியாக அஞ்சலி தீர்மானத்தை தோழர். உஷாராணி வாசித்தார், வரவேற்பு குழுத் தலைவர் தோழர் பிகாஸ் பட்டாச்சார்யா ,எம்பி பிரதிநிதிகளை வரவேற்றார், CITU அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர் தபன் சென் மாநாட்டை துவக்கி வைத்தார். உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் கன்வீனர் தோழர் ஏ ஆர் சிந்து அறிக்கையை சமர்ப்பித்தார்

உழைக்கும் பெண்களின் பல்வேறு பிரச்சனைகளில் தேசிய அளவில் இயக்கங்களை கட்டியெழுப்புவதற்கான மிகப்பெரிய வாய்ப்பு உள்ளது உள்ளூர் பிரச்சனைகள் துறை சார்ந்த கோரிக்கைகள் அடிப்படையில் இயக்கத்தை மேம்படுத்த முடியும் என்றும் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தில் பல்வேறு இயக்கங்களில் பெண்களின் பங்கேற்பு அதிகரித் துள்ளது கடந்த 2020 சர்வதேச பெண்கள் தினம் சிறை நிரப்பும் போராட்டமாக நடைபெற்றது இதில் 1.5 லட்சம் தோழர்கள் கலந்து கொண்டு கைதானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்பதையும் அறிக்கை சுட்டிக் காட்டியது.

பெண்கள் கலந்து கொள்ள இயலாத நேரங்களில் கூட்டங்கள் நடத்துவது, கூட்டங்களில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு பயணம் செலவு கொடுக்க மறுப்பது, பேச்சுவார்த்தைக்கு போடப்படும் குழுக்களில் பெண்களை இணைக்காதது போன்ற அமைப்பு ரீதியான பலவீனங்களையும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில, மாவட்ட அளவில் ஏற்படும் பிரச்சினைகள் ,பிரச்சினையின் தன்மையைப் புரிந்து கொள்ளாமல் போராட்டத்தை திட்டமிடாமல் புரிதலின்றி விட்டுவிடும் குறைபாடு மாநில உழைக்கும் பெண்கள் கமிட்டியில் இருப்பதாக அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மாநாட்டில் 21 மாநிலங்களில் இருந்து பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அதாவது தையல், கட்டுமானம் ,ரயில்வே தொழிலாளர், ஒப்பந்த ஊழியர்கள், மின்சாரம், அங்கன்வாடி ,மதிய உணவு, நடத்துனர் ,மருத்துவ பிரதிநிதி, கிராம சுகாதார பணியாளர்கள், நகராட்சி தொழிலாளி, ஐடி , தேயிலை தோட்டம், ஆட்டோ ஓட்டுனர், வீட்டுவேலை செய்பவர்கள் ,பள்ளி ஊழியர்கள், நிலக்கரி , முந்திரி ,கணக்காளர், செவிலியர் ,சுரங்கம் ,சனல், கூட்டுறவு வங்கி, தனியார் வங்கி, மருத்துவமனை ,தொழிற்சாலைப் பணியாளர்கள் ,மாநகராட்சி ஊழியர்கள் ,சாலையோர வியாபாரிகள், காபி தோட்டம் மற்றும் எல்ஐசி ,வங்கி ,மாநில அரசு, பிஎஸ்என்எல் என்று 272 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் இதில் தமிழ்நாட்டின் சார்பாக 27 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் 16 மாநிலங்களில் இருந்து சிஐடியு மாவட்ட தலைவர், பொதுச் செயலாளர் ,பொறுப்பாளர் என்று மாநாட்டில் கலந்துகொண்டனர், 31 பிரதிநிதிகள் விவாதத்தில் கலந்து கொண்டனர் தமிழ்நாட்டிலிருந்து தோழர் சித்ரா -குமரி தோழர். விஜயலட்சுமி- மின் அரங்கம், தோழர் .திவ்யா .ITஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

சமமற்ற ஊதியம் ,தனியார் நிறுவனத்தில் மகப்பேறு விடுப்பு மறுக்கப்படுதல் ,கட்டாய இரவு பணி, பணியிடத்தில் பாலியல் பிரச்சனைகள் ,வேலை நேரம் ஆகியவை விவாதித்தனர், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் தலையீடுகள் ,போராட்டங்கள், பெற்ற சாதனைகள் ,அனுபவங்கள் ஆகியவற்றை பகிர்ந்து கொண்டனர்.

மாநாட்டை அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தலைவர் மாலினி பட்டாச்சார்யா வாழ்த்திப் பேசினார் பெண்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறை ,வகுப்புவாதம் ஆகியவற்றுக்கு எதிராக இன்னும் பெண்கள் சந்திக்கும் ஆபத்துக்கு எதிராக வலுவான போராட்டம் தேவை என்பதை அவர் கூறினார்.




## மாநாட்டில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. RSS தலைமையிலான அரசின் வகுப்புவாத, பயங்கரவாத அச்சுறுத்தல் சம்பந்தமாகவும்.
2. ஹரியானா மற்றும் டெல்லியில் போராடும் அங்கன்வாடி ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவு.

தகுதிகான் அறிக்கையை தோழர் மாலதி சிட்டிபாபு சமர்ப்பித்தார் , மாநாட்டில் 26 முதல் 75 வயது வரை பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் 75 வயதில் இரண்டு தோழர்கள் ஒருவர் கமலாதாஸ் - மேற்குவங்கம் , தோழர் மோகனா - தமிழ்நாடு.கன்வீனர் தமது தொகுப்புரையில் கோரிக்கைகள் மற்றும் எதிர்கால இயக்கங்கள் 22 அம்ச கடமைகள் இயக்கங்கள் என்று அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிறைவுரையாக தோழர் ஹேமலதா அவர்கள் பேசும்பொழுது இம்மாநாடு திட்ட பணியாளர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு, வீட்டு வேலை பணியாளர்கள், மருத்துவமனையில் பணி செய்பவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தனியார் பள்ளிகள், கடைகள் மற்றும் ஏராளமான பெண்கள் பணிபுரியும் பாரம்பரிய துறைகளில் தவிர சில முன்னுரிமை துறைகளை அடையாளம் கண்டுள்ளது. வணிக வளாகங்கள் மற்றும் பெண்கள் அதிகம் உள்ள தொழில்களை கண்டறிந்து அவர்களை தொழிற்சங்கத்தில் இணைக்க முயற்சி எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

CITU-வின் அந்தந்த மாநாடுகளுக்கு முன்பாக அனைத்து மாவட்ட, மாநில, ஒன்றிய அளவிலான உழைக்கும் பெண்கள் மாநாடுகளை நடத்த மாநாடு முடிவு செய்தது.

பெண்களின் முக்கியமான கோரிக்கைகள் மற்றும் உள்ளூர் பிரச்சினைகளை ஆய்வு செய்து மாநில மற்றும் மாவட்ட அளவில் திட்டமிட்டு மிகப்பெரிய பிரச்சார இயக்கமாக கொண்டு சென்று வருகிற 2023 மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினத்தில் மாவட்ட, மாநில அளவில் வெகுஜன அணி திரட்டலாக கொண்டு செல்ல மாநாடு முடிவு செய்துள்ளது.

இறுதியாக தோழர் ஆனந்தி சாகு பொதுச்செயலாளர் மேற்குவங்கம் அவர்களின் நன்றி உரையுடன் மாநாடு முடிந்தது.

---

# சிவகங்கை மின் வட்டக் கிளையின் ஆண்டு பேரவை

சிவகங்கை கிளையின் மாநாடு 28.05.2022 அன்று எஸ். உமாநாத் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை தோழர் ஆர். குருவேல் மாநில துணைத் தலைவர் துவக்கி வைத்தார். தோழர் எஸ். வண்ணமுத்து மாநில செயலாளர் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்.

**புதிய நிர்வாகியாக**

தோழர் **எஸ். உமாநாத்**, தலைவர்

தோழர் **ஆர். கருணாநிதி**, செயலாளர்

தோழர் **வி. மோகனசுந்தரம்**, பொருளாளர்




இழந்ததை பெற!

பெற்றதை

இழக்காமலிருக்க!

# ஒன்றிணைவோம் வாரீர்,

தமிழக அரசு நிதிநிலையை காரணம் காண்பித்து அரசின் பொதுத்துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலவில்லை என கூறி நிதி நிலைமை சரியான பிறகு பரிசீலிக்கப்படும் என அறிவித்திருந்தது. மேலும் நஷ்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசு ஊழியருக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை வழங்கக்கூடாது என அறிவித்திருந்தது.

**<u>வாரிய உத்தரவு-2 -12.04.2022-ஐ திரும்ப பெறுக</u>!**

இதனையடுத்து தமிழக மின்சார வாரியம் வாரிய ஆணை 2 நாள் 12.04.2022-ன் மூலம் மின்சார வாரிய பணியாளர்கள் இதுவரை பெற்றுவந்த பஞ்சப்படி, வீட்டுகடன், வாகனக் கடன், கல்விக்கடன், உள்ளிட்ட சலுகைகளை தொடர்ந்து வழங்க இயலாது என்றும், பஞ்சப் படியை தமிழக அரசு தனது ஊழியர்களுக்கு அறிவித்த பின்பு மின்சார வாரியம் தனது பணியாளர்களுக்கு வழங்குவதற்கு தமிழக அரசின் அனுமதி பெற்ற பின்பு தான் வழங்க இயலும் என தற்போது வாரிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

மின்வாரியத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகஅரசு பஞ்சப்படி சம்மந்தமாக அரசு ஆணை வெளியிட்ட பின்பு மின்சார வாரியம் தனது ஊழியர்களுக்கு வழங்கி வந்த நடைமுறையும் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராகவும் மீறப்பட்டுள்ளது.

கடந்த அரசு ஆணை எண் 27 நாள் 21.01.2002-ன்படி அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்புஅரசு வெளியிட்ட வழிகாட்டுதலை கொண்டு தற்போது வாரிய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு உள்ளதாக வாரிய உத்தரவு வாரிய ஆணை 2 நாள் 12.04.2022-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜனவரி 2022-லிருந்து வழங்க வேண்டிய மூன்று சதவீத பஞ்சப்படியும் சரண்டர் விடுப்பும் பறிக்கப்பட்டுள்ளது. வாரியம் மேற்கண்ட உத்தரவை திரும்ப பெறுவதோடு அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும்.

**<u>முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திடுக</u>!**

மின்வாரியம் பொதுத்துறையாக செயல்பட்டுவரும் நிலையில் ஊழியர்களின் பணி நிலைமை மற்றும் ஊதிய திருத்தம் முறைப்படுத்துகின்ற வகையில் தொழிற்தகராறு சட்டம் 1947-ன்படி இருதரப்பு, முத்தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் முறைப்படுத்தப்பட்டு வருவதை மின்வாரிய நிர்வாகம் கவனத்தில் கொள்ளவில்லை.

அரசு ஆணை எண் 100 தொடர்பாக தொழிற்சங்கம் தொடுத்த வழக்கில் மின்வாரிய நிர்வாகம் ஊழியர்களின் பணி நிலைமையில் மாற்றம், ஊதியம், ஓய்வூதியம், பஞ்சப்படி உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் பாதுகாப் போம் என பதிவு செய்த பிரமானபத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததை மின்வாரிய நிர்வாகம் மதித்து தமிழக அரசின் உத்தரவாதத்துடன் கூடிய

முத்தரப்பு ஒப்பந்தம் காணப்பட வேண்டும்

**காலிப்பணி இடங்களை நிரப்பிடுக!**

மின்வாரியத்தில் 52,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ள நிலையில் கடந்த ஐந்தாண்டுகளாக கேங்மேன் பதவியைத்தவிர வேறு எந்த பதவியும் நிரப்பப்படவில்லை. கணக்கீட்டு பிரிவில் மட்டும் 4000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்களும், களப்பிரிவில் பிரிவு பொறியாளர் உட்பட 35,000 பதவிகள் காலிப்பணி இடங்களாக உள்ளதை மின்வாரிய நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. கூடுதல் பணிச்சுமையோடு ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தமிழக அரசின் முதன்மை நிறுவனமாக இருக்க வேண்டிய மின்வாரிய நிர்வாகம், காலிப்பணி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டுவது தான் பணியாளர்களின் எதிர்பார்ப்பு. மின்வாரிய உத்தரவு 2-ல் கூட புதிய பதவிகளை நிரப்பிடுகின்ற பொழுது அதற்கு சமமான பதவிகளை கண்டறிந்து ஒழிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளதை நிர்வாகம் திரும்பப்பெற வேண்டும்.

**ஊதிய உயர்வு**

மின்வாரிய பணியாளர்களுக்கு கடந்த 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட குழு ஒருமுறை கூடதொழிற்சங்கங்களை அழைத்து பேச தயாரில்லை. கொரானா தொற்றுநோய் காலத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்களை பலிகொடுத்து தடையில்லாத மின்சாரத்தை வழங்கியவர்கள் மின்வாரிய பணியாளர்களே. எனவே ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்கி தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் ஒப்பந்தம் காணப்பட வேண்டும்.

**RE DEPLOYMENT**

தற்போதைய மின்வாரிய நிர்வாகம் புதிய பதவிகளுக்கு அனுமதிதராமல் மின்வாரிய நிர்வாகமே தன்னிச்சையாக முடிவெடுத்து சில பொறுப்புகளை காலியாக்கி புதிய பொறுப்பு களுக்கு நியமனம் செய்வதை கைவிடுவ தோடு வேலைபளு ஒப்பந்தத்தின் மூலம் உருவான புதிய பதவிகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். Re deployment முறையை கைவிட வேண்டும்.

**மின்வாரிய நஷ்டத்திற்கு யார் காரணம்!**

மின்வாரிய நிர்வாகம் தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்கிறது. மாநில மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் தொகைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்வதாலும், மத்திய ஒழுங்குமுறை ஆணையம் தனியார் மின்சார விற்பனையாளரிடம் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ. 12/-மேல் விற்கக் கூடாது என உத்தரவிட்டும், பற்றாக் குறையை காரணம் காட்டி கூடுதல் விலை கொடுத்து வாங்கியதனால் அதிகப்படியான செலவினம் ஏற்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பேற்க வேண்டிய வர்கள் நிர்வாகமும்,அரசும் தானே தவிர ஊழியர்களோ, பொறியாளர்களோ அல்ல.

கடந்த 2020-21-ம் ஆண்டில் மின் வாரியத்தின் மொத்த வருமானம் ரூ.63388.52 கோடி, ஆனால் செலவினமாக ரூ.76,795.84 கோடி ஏற்பட்டுள்ளது. மின்சாரத்தை தனியாரிடம் இருந்தும் மத்திய தொகுப்பின் மூலமும் மின்சாரத்தை கொள்முதல் செய்ததில் ஏற்பட்ட செலவு 47,987.89 கோடி, அதாவது மொத்த வருவாயில் 75.7 சதவீதம் மின்சார கொள்முதலுக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் கூடுதலாக தனியாரிடமிருந்து அதிகவிலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்தது அதிகம். மின்வாரியத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களில் முழுமையாக உற்பத்தி செய்தாலே இந்த செலவை சரிகட்ட முடியும். நீண்ட கால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களை மறுபரி சீலனை செய்ய வேண்டும்.

நிதிச்சுமைக்கு ஒரு போதும் பணியாளர்கள் காரணம் அல்ல. 52,000 காலிப்பணி இடங்கள் இருந்தும் கூடுதல் சுமையோடு பணியாற்றும் பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியர்களுக்கும் செலவு செய்த தொகை ரூ.9144.15 கோடி இது வருவாயில் 14.42 சதவீதமே. தமிழக அரசு மின்வாரிய பணியாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சலுகைகளை உரிமைகளை அளிக்க வேண்டும். மாறாக நிதிச்சுமையை காரணம் காட்டி பணியாளர் நலன்களில் கைவைப்பது அரசிற்கு அழகல்ல.

எனவே தமிழக அரசின் தலையீட்டை வலியுறுத்தி 07.06.2022-ல் மண்டல தலைமை பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற உள்ள கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்போம். வெற்றி பெறச்செய்வோம்.



# ஒப்பந்தங்களை மீறும் வாரியம் போராட்டமே தீர்வு....

மின்வாரிய வரலாற்றில் தொழிற் தகராறு சட்டம் 1947-ன் படி ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தங்களை வாரியம் அப்பட்டமாக மீறுகின்ற வகையில் தொடர்ந்து உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றது வாரியம். மீறுவது என்பது சட்டப்படி தவறு என்று தெரிந்தும் அதை கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வருகின்றது. ஒப்பந்தங்களை மீறியானல் நீதிமன்ற வழக்குகளை சந்திக்க வேண்டி வரும் என்று நன்கு தெரிந்த பிறகும் வாரியம் மீறுவது என்பது அரசின் கொள்கை முடிவாக மாறி வருகிறது.

சமூகத்தில், தொழில் நிறுவனங் களில், கல்வி நிறுவனங்களில் மற்றும் அனைத்து இடங்களிலும் அரசின் சட்டங்கள் அமலாக்கம் செய்ய வேண்டும் என்பது அரசின் கொள்கையாக உள்ளது. சட்டங்கள் அமலாக்கம் செய்யப்பட்டால் மட்டுமே சட்டமீறல் நடக்காது அமைதி நிலவும். ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தை உருவாக்க சட்டங்கள் பேருதவி புரிகிறது. சட்டங்கள் தவறு செய்யாமல் இருப்பதற்கு துணை நிற்பதோடு தவறு செய்பவர்களை தண்டிக்கவும் செய்கிறது. இப்படிப்பட்ட எண்ணற்ற சட்டங்கள் ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டு மாநில அரசுகள் அமலாக்கம் செய்து வருகின்றன. சட்டங்களை அமலாக்கவும் பின்பற்றவும், சமூகத்திற்கும், சமூக பிரஜைகளாக உள்ள மக்களுக்கும் எவ்வளவு முக்கியமானதோ அதே போல இந்த சட்டத்தை இயற்றிய ஒன்றிய மாநில அரசுகளுக்கு பல மடங்கு பொறுப்பும், கடமையும் உள்ளது. அதை அரசுகள் செய்கின்றதா என்ற பெறுத்த கேள்வி எழுகிறது. வாக்களித்த மக்களுக்கு அரசு சட்டங்கள் மூலம் செய்ய வேண்டிய கடமைகளை செய்ய தவறுகிறது.

சமூகத்தை முற்போக்கு சமூகமாக, வலிமை வாய்ந்த சமூகமாக அடுத்தக்கட்ட தலைமுறை போற்றும் சமூகமாக உருவாக்க வேண்டிய முக்கிய கடமையும், பொறுப்பும் அரசுகளுக்கு உண்டு. அதை செய்ய தவறுகின்ற பொழுது சமூகத்தில் அமைதியின்மையும் போராட்டங்களும் தானாகவே எழுகின்றது. மின் வாரியத்தில்

இது போன்ற சட்டமீறல்களும், அரசின் வாக்குறுதி மீறல்களும் ஏற்பட்ட காரணத்தினால் போராட்டங்கள் தொடர்ந்து நடக்கிறது.

**சட்டவிதி மீறில்-1**

மின் வாரியம், தொழிற்சங்கம், அரசு ஆகிய மூவரும் இணைந்து தொழிற்தகராறு சட்டம் 1947-ன் படி போடப்பட்ட ஒப்பந்தங்களை அரசே மீறுகிறது. அரசின் பொதுத்துறையான மின்சார வாரியமே மீறுகிறது. உதாரணமாக பஞ்சப்படி என்பது ஒன்றிய அரசு எப்பொழுதெல்லாம் அறிவிக்கிறதோ அப்பொழுதெல்லாம் மின்வாரிய ஊழியர்களுக்கு பஞ்சப்படி அளிக்க வேண்டுமென்பது ஏற்றுக்கொண்ட ஒப்பந்தம். இதை அமல்படுத்தாமல் இருப்பதற்கு சொல்லும் காரணமோ ஏற்க இயலாத ஒன்றாகும்.

**சட்டவிதி மீறல்-2**

வேலைபளு ஒப்பந்தப்படி களஉதவி யாளர், கம்பியாளர், கணக்கீட்டாளர். தொழிற்நுட்ப உதவியாளர் மற்றும் பதவி உயர்வின் மூலம் பெறும் பதவிகள் பல ஆயிரம் காலி பணி இடங்களாக உள்ளது. இவைகளை நிரப்பிட வேண்டும் என்பது ஏற்றுக்கொண்ட ஒப்பந்தம். அதை அப்பட்ட மாக மீறுகின்றது. ஏற்கனவே கூடுதல் வேலைபளு சுமையோடு, காலிப்பணி வேலை பளுவையும் சுமந்து பணி செய்கின்றனர். இதனால் மின் விபத்துக்கள் ஏற்பட்டு விலை மதிப்பற்ற மனித உயிர்களை இழக்க நேரிடுகிறது. மின் நுகர்வோருக்கு தடையில்லாத மின்சாரம் தருவதற்கும் தொய்வு ஏற்படுகிறது. இதை நிர்வாகம் உணர்ந்தும் சரி செய்ய மறுக்கிறது என்பது தான் வேதனை தரும் விஷயமாகும்.

**சட்டவிதி மீறல்-3**

22.02.2018 அன்று ஏற்படுத்தப் பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி புதிய பணி நியமனங்களில் உள்ளே வரும் ஊழியர்களுக்கு பயிற்சிகாலம் அனைவருக் கும் ஒரே மாதிரியாக இருக்க மூன்று மாதங்கள் என நிர்ணயிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப் பட்டது. அதையொட்டி மின்வாரிய உத்திரவும், அதற்கு தெளிவுரையும் வழங்கப் பட்டது. அவ்வாறு வழங்கிய வாரிய நிர்வாகம், கேங்மேன் என்ற புதிய பணியிடத்தை தேர்வு செய்வதற்காக ரூபாய் 15,000/- தொகுப்பூதியமும், இரண்டாண்டு கள் பயிற்சி காலம் என்றும் போடப்பட்ட ஒப்பந்தத்திற்கு நேர் எதிராக உத்திரவை வழங்கி முத்தரப்பு ஒப்பந்தத்தை மீறி யுள்ளது. 9613 கேங்மேன் பணியாளர் களிடம் உழைப்பு சுரண்டல் செய்தது மட்டுமல்ல. ரூபாய் 15,000 சொர்ப்ப ஊதியத்திற்கு வெளிமாவட்டத்திற்கு சென்று வேலை செய்ய வேண்டுமென்று வழங்கிய உத்தரவு என்பது சட்ட விதிமீறல் மட்டுமல்ல மிகவும் அபத்தமான உத்தரவாகும்.

**விதிமீறல் -4**

அரசு ஆணை எண் 950 நாள் 08.08.1990 என்பது உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் வழங்கிய அரசாணை. இது பிரத்யேகமாக மின்சார வாரியத்திற்கு மட்டும் வழங்கப்பட்டதாகும். அதிலும் குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஒப்பந்த ஊழியர்களை பயன்படுத்தக்கூடாது என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை அப்பட்டமாக தமிழ்நாடு மின்சார வாரியம் மீறியுள்ளது. சட்டத்தையும், நீதிமன்ற தீர்ப்பையும் மதித்து நடக்க வேண்டிய மின்சார வாரியம் நீதிமன்ற தீர்ப்பை மீறி ஒப்பந்த ஊழியர்களை பயன்படுத்துவது தொடர்கதையாக உள்ளது. ஒப்பந்த ஊழியர்களை ஒப்பந்தக்காரர்கள் தான் வேலை வாங்குகின்றார்கள், மின்வாரிய நிர்வாகத்திற்கும் ஒப்பந்த ஊழியர்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என கூறி மின்வாரியம் தப்பிக்க முயல்கிறது. அரசும் இவர்களுக்கு துணை போகிறது.

இது போன்ற எண்ணற்ற விதிமீறல்கள், நீதிமன்ற தீர்ப்புகளை மீறுதல் என்பது தொடர்கதையாக உள்ளது. அரசு என்பது வாக்களித்த மக்களுக்கும், பல்வேறு வரிகளை கட்டிய மக்களுக்கும், சமூகத்தின் உயர்வுக்காக, அரசு நிறுவனங்களின்

உயர்வுக்காக தொடர்ந்து போராடி வருபவர்ளை அழைத்து பேசி சுமூக உறவு ஏற்பட அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதே அரசின் கடமையாகும். எதிர்கட்சியாக இருக்கும் பொழுது ஆதரிப்பதும், ஆளுங்கட்சியான பிறகு தொழிற்சங்கங்களை அவமதித்து கஜானாவில் நிதி இல்லை என்று காரணம் காட்டி கோரிக்கைகளை மறுப்பதும் நியாயமற்ற செயல். தொழிலாளி வர்க்கம் அதை ஒரு போதும் அனுமதிக்காது.

மின்வாரியம் உள்ளிட்ட பொதுத் துறைகளின் நஷ்டத்திற்கு ஊழியர்களோ, பொறியாளர்களோ, அதிகாரிகளோ காரணமல்ல. திறமையற்ற நிர்வாகமும் நிர்வாகத்தில் நடக்கும் ஊழலும் அரசின் கொள்கைகளுமே காரணமாகும். நேர்மையான நிர்வாகத்தை, ஊழலற்ற நிர்வாகத்தை மக்கள் விரும்புகின்றார்கள். தொழிலாளர்கள் விரும்புகின்றார்கள்.

**மக்களின் விருப்பத்தை**
**அரசு செய்யும் என்று நம்புகிறோம்.**

**- தி.ஜெயசங்கர்**

# இராமநாதபுரம் மின்திட்ட கிளையின் திட்ட மாநாடு

இராமநாதபுரம் மின்திட்டக் கிளையின் திட்ட மாநாடு தலைவர் தோழர் வி. முருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக செங்கொடியை கிளையின் மூத்த தோழர் சேகர் ஏற்றி வைத்தார். திட்ட இணைச்செயலாளர் தோழர் ஜெயமணி வரவேற்புரையாற்றினார். திட்ட நிர்வாகி தோழர் சசிகுமார் அஞ்சலி தீர்மானத்தை முன் மொழிந்தார்.

திட்ட மாநாட்டை மதுரை மண்டலச் செயலாளர் தோழர் எஸ். உமாநாத் அவர்கள் துவக்கி வைத்தார். திட்டச்செயலாளர் தோழர் ஜி. காசிநாதன் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். பொருளாளர் தோழர் ரகுநாதன் வரவு-செலவு அறிக்கையை முன்வைத்தார். வேலை அறிக்கையின் மீது வந்த விவாதங்களுக்கு திட்டச்செயலாளர் தொகுப்புரை வழங்கினார்.மாநாட்டை வாழ்த்தி சிஐடியு மாவட்டத் தலைவர் தோழர் அய்யாதுரை, உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு கன்வீனர் தோழர் மாலா,எல்.ஐ.சி சங்க தலைவர் தோழர் முத்துபாண்டி, ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் திட்ட நிர்வாகி தோழர் ராமச்சந்திரபாபு, அரசு போக்குவரத்து கழக சம்மேளன சிஐடியு தலைவர் தோழர் எஸ்.ஆர். ராஜன் வாழ்த்தி பேசினார்.

நிறைவாக மத்திய அமைப்பின் மாநிலபொதுச்செயலாளர் தோழர் எஸ்.ராஜேந்திரன் நிறைவுரையாற்றினார்.

## புதிய நிர்வாகிகள்

தலைவர்
தோழர் **வி.முருகன்,**
செயலாளர்
தோழர் **ஜி. காசிநாதன்,**
பொருளாளர்
தோழர் **சி.ரகுநாதன்**

**துணை தலைவர்கள்**
தோழர் ஆர். குருவேல்,
ஆரோக்யம் சசிக்குமார்,
எம்.மாலா,
என்.புனிதா,
ஆர். சண்முகம்,
வி.சாத்தையா,

**இணைச் செயலாளர்கள்**
தோழர் வி.எம். முருகேசன்,
எம்.ஜெபமணி,
எஸ்.முருகன்,
பி.குப்பாண்டி,
எம்.இராஜேந்திரன்,
எம். சசிக்குமார்,
பி.பால் பாண்டி (கேங்மேன்)
எம். கண்ணன்(ஒப்பந்த ஊழியர்)



# அனல் மின்சாரத்தின் எதிர்காலம்?

- தி.ஜெயசங்கர்

தமிழகத்தின் மின்சார உற்பத்தியில், இந்தியாவின் மின்சார உற்பத்தியில் 65 சதவீதத்திற்கு மேல் நிலக்கரியை மூலப்பொருளாக கொண்ட அனல் மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரமாகும். அனல் மின்சாரத்தை நம்பியே இந்திய தொழில் துறையும்,இந்திய சமூகம் இருக்கிதென்றால் அது மிகையாகாது. இதற்கான நிலக்கரியை கோல் இந்தியா என்ற நிலக்கரி நிறுவனம் வழங்கி வருகிறது. நிலக்கரி பற்றாக் குறையால் ஒரு சில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் இந்தோனேஷியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளிடமிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்கின்றது. நிலக்கரியை கருப்பு தங்கம் என்று சொல்வார்கள். இந்தியாவில் கிடைக்கக்கூடிய நிலக்கரி படுகை என்ற இயற்கை வளமானது எதிர்வரும் 40 ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும். அதனால் மாற்றுமுறை மின்சார உற்பத்திக்கு செல்ல வேண்டுமென்று அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் தொடர்ந்து எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இயங்கும் அனல் மின் நிலையங்களை சுற்றுசூழல் மாசுபடுதல் காரணம் காட்டி அனல் மின் நிலையங்களை மூட வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்பு உத்திரவு வழங்கினார். ஒரு பக்கம் 25 ஆண்டுகள் உற்பத்தி செய்த அனல் மின் நிலையங்களை மூட வேண்டும் என்று சொல்கின்ற ஒன்றிய அரசு அதற்கிணையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய மாற்று வழி வகைகளை உருவாக்க வோ, தயார்படுத்தவோ முன்வரவில்லை. அனல் மின் நிலையங்கள் மூலம் காற்று மாசுபடுதல், நீர்மாசுபடுதல் மற்றும் புவி வெப்பமயமாதல் என்ற உண்மை ஒரு புறம் இருந்த போதும் இதற்கான மற்றுத் திட்டத்தை, மாற்றுக்கொள்கையை அறிவித்து நிதி ஒதுக்கீடு செய்து போர்க்கால அடிப்படையில் செயல்படுத்த வேண்டியது ஒன்றிய அரசின் கடமையாகும். ஒன்றிய அரசு அதை செய்யாமல் அரசாணை வெளியிடுவதால் மட்டுமே எல்லாம் மாறிவிடும் என்பது ஏற்புடையதல்ல.

இந்தியாவில் இயற்கை வளங்களுக்கு குறைவில்லை. ஆண்டு முழுவதும் மழைபெய்யும் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள சிரபுஞ்சி முதல், காடுகள், மலைகள், ஆறுகள்

போன்ற அனைத்து வளங்களும் கொண்ட இந்திய திருநாட்டில் இயற்கை நமக்கு அளிக்கும் கொடையான மழை நீரை சேமிக்காமல் கடலில் கலக்கின்ற நிலை ஒருபுறம். தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை போன்ற பருவ காலங்களில் மழைநீர் கடலில் கலப்பதை தடுத்து நீர்தேக்கங்கள் கட்டுவது அதன் மூலம் புனல் மின்சாரம் (Hydro Energy) தயாரிப்பது போன்றவைகள் மூலம் மாசற்ற பசுமை மின்சாரத்தை (Green Energy) உற்பத்தி செய்ய முடியும். இதை செய்வதற்கு சரியான திட்டமிடலும், நிதியும் தேவை. அதை செய்யக்கூடிய பொருளாதார வலிமையும், வல்லமையும் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உண்டு. பிரம்மபுத்திரா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து பலநூறு டி.எம்.சி ( TMC ) தண்ணீர் கடலில் வீணாக கலப்பதை ஒன்றிய அரசு கவனிக்காமல் போனது ஏன் - மின்சாரத்தை சேமிக்கும் தொழில் நுட்பம் நம்மிடம் இல்லை. ஆனால் மழை நீரை சேமிக்க பல வழிகள் இருந்தும் சேமிக்காமல் இருந்த அரசுகளே இந்தியாவின் ஒட்டு மொத்த மின்சார தட்டுப்பாட்டிற்கு இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ளனர்.

இவை போன்ற இயற்கை வளங்களை பயன் படுத்துவதை தவறவிட்டு, சூரிய ஒளி மூலம் மின்சார உற்பத்தி செய்வதை தவறவிட்டு, காடுகளை அழித்து அதன் அடியில் நிலக்கரி இருப்பதாக சொல்லி மலைவாழ் மக்களை அங்கிருந்து அகற்றுவது, அவர்களுக்காக போராடுபவர்களை அரசு நசுக்குவது ஜனநாயகமற்ற செயல், இந்தியாவின் வளர்ச்சிக்கு அது பயன்படாது.

தூத்துக்குடி, எண்ணூர் போன்ற கடலோர பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட அனல் மின் நிலையங்களை அமைப்பதால் காற்று மாசுபடுதல் அதிகமாகின்றது. வடசென்னை அனல் மின் நிலையங்கள் மூன்று மற்றும் பல தனியார் மின் நிலையங்கள் ஒரே பகுதியில் அமைந்த காரணத்தால் எண்ணூர், மீஞ்சூர் அதன் சுற்று வட்டார பகுதிகளில் காற்றில் மாசு அதிகமாக கலக்கின்றது. அதே போல தூத்துக்குடியிலும் காற்று மாசுபட்டு மக்கள் வசிக்க முடியாத இடமாக மாறும் அபாயம் உள்ளது.

எனவே நிலக்கரியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதிலிருந்து மாறு பட்டு, புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை தயார் செய்வது மற்றும் பசுமை மின்சாரத்தை (Green Energy) தயார் செய்வது போன்ற பாதையில் அரசுகள் செல்ல வேண்டும். இதன் மூலமாகவே இந்திய பொருளா தாரத்தை வளர்க்கவும், புவி வெப்ப மயமாதலை தடுக்கவும் முடியும். அரசுகள் செய்யும் என்று நம்புகிறோம்.

ஆஸ்திரேலியா நிலக்கரி படுகைகள் அதிகமாக உள்ள நாடு. இதன் முக்கிய தொழில் நிலக்கரியாகும்.நிலக்கரிசுங்கங்களே இந்த நாட்டின் பொருளாதார வலிமையை கட்டுவதாக உள்ளது. இந்தியா உட்பட பல நாடுகளுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து தான் நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. உலக அளவில் நிலக்கரி மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 40 சதமாகும்.

அதே போல உலக அளவில் வெளியிடப்படும் கார்பன் அளவில் மூன்றில் ஒரு பங்கு நிலக்கரியால் வெளியேறுகிறது. இந்திய அளவில் நிலக்கரி மூலமாக வெளிறேற்றப்படும் கார்பன் அளவு ஒரு நபருக்கு ஓர் ஆண்டுக்கு 1.5 டன் என்று கணிக்கப்பட்டுள்ளது.இது காற்று மாசு படுதல், நீர் மாசுபடுதல்,புவி வெப்ப மயமாதல் போன்ற சீரழ்வி இயற்கையோடு இணைந்த காரணிகளாகும். எனவே தான் ஜி 20 நாடுகளின் மாநாட்டின் போது உலக நாடுகள் அனைத்தும் குறிப்பாக தொழில் துறையில் வளர்ச்சி அடைந்த அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும் கார்பன் வெளியிடுவது குறைப்பது என முடிவு செய்யப்பட்டது.அதில் ஒன்று தன் அனல் மின்சாரத்திற்கு மாற்றாக புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை மற்றும் பசுமை மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும்.




கேங்மேன் பணியாளர்களை மின்வாரியத்தின் உள்ளே பணிக்கமர்த்தியது நீண்ட நெடிய வரலாறு கொண்டது. அந்த வரலாற்றை எழுதியதும் வெற்றி கொண்டதும் மின் ஊழியர் மத்திய அமைப்பு. மத்திய அமைப்பிற்கு எதிராக பலர் பொய் பிரச்சாரம் செய்து, திசை திருப்ப முயன்ற அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்தது. இதை ஜீரணித்துக் கொள்ள முடியாதவர்கள் கோயம்புத்தூர் உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் பிரிவு அலுவலகத்திலுள்ள முகவர் என்ற பொறுப்பை பயன்படுத்தி, பயமுறுத்தி செக்ஆப் சிஸ்டத்தில் கையெழுத்து பெற்று உறுப்பினராக்கி உள்ளனர். இந்த நிலை என்பது பொய் முலாம் பூசப்பட்ட ஆபரணம் போன்றது. வேஷம் கலையும் சாயம் வெளுக்கும் அப்பொழுது தெரியும் தொழிலாளி வர்க்கத்தின் காவலனாக இருக்கப்போவது யார் என்று?

கேங்மேன் பணியாளர்கள் சொந்த ஊருக்கு வெளியே பணியில் அமர்த்தப்பட்டு சொர்ப ஊதியம் ரூ.15,000/-க்கு வேலை செய்து வருவது நிர்வாகத்தின் கடைந்தெடுத்த சமூக பார்வையற்ற உத்தரவாகும். ரூ.15,000-க்கு வெளி மாவட்டத்தில் வாழ முடியுமா என்று தெரியாத அதிகாரிகளும், மின்சார வாரியத்தில் வேலை செய்கிறார்கள் என்பது மின் வாரியத்தின் சாதனை தான்? புதிய பணி நியமனங்களுக்கு மூன்று மாதங்கள் என்று ஒப்பந்தம் போட்டு, அதன் பிறகு இரண்டாண்டுகள் பயிற்சி காலம் என்று இதே மின்வாரியம் உத்திரவு வழங்குவது என்பது ஒப்பந்த மீறல் என்பது மட்டுமல்ல ஒரு வகையில் சர்வாதிகார மனப்பான்மையை தெரிவிப்பதாகும். வாரிசு வேலைக்கு பணி அமர்த்தப்பட்டால் மூன்று மாதங்கள் பயிற்சி என்றும், கேங்மேன் பணியாளர்களுக்கு இரண்டாண்டுக்கள் என்பது ஒரு கண்ணில் வெண்ணையையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பை பூசுவதாகும். இந்த செயலை செய்யும் மின்சார வாரியத்தை என்ன சொல்வது!

கேங்மேன் பணிக்கு அமர்த்தபட்ட பணியாளர்களில் கூடுதல் கல்வித் தகுதியுடன் பட்டயம்,பட்டம், முதுகலை பட்டம் பெற்ற பணியாளர்கள் உள்ளனர். இவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப உள்முக தேர்வில் பணி அளித்து மனிதவளத்தை பயன்படுத்தி மின்சார வாரியத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்துவதற்கு மாறாக உள்முக தேர்வுக்கு இவர்களுக்கு அனுமதி இல்லை என்ற உத்தரவை வழங்கி சிறப்பான மனித வளத்தை பயன்படுத்த தவறியது மட்டுமல்ல. மின்வாரியத்தில் ஒரு தலைபட்சமாக நிர்வாகம் நடத்துவதாக உள்ளது. நிர்வாகத்தின் இந்த போக்கு ஏற்புடையதல்ல. நிர்வாகத்தின் போக்கை மாற்ற ஜூன் 10-ல் சென்னை நோக்கி கேங்மேன் ஊழியர்களே! வாரீர்

கேங்மேன் பணியாளர்களுக்கு விபத்து சிகிச்சை அளிக்க வாரிய உத்தரவு 2013 பொருந்தாது, மருத்துவ, ஈட்டிய விடுப்பு போன்றவைகள் எதுவும்இல்லை என்று கூறும் நிர்வாகமே நிலையாணைகள் சட்டப்படி நிரந்தர பணியில் ஈடுபடுத்தி வாரியமே ஊதியம் வழங்கி

சம்பள விகித பட்டியலை அறிவித்த பிறகும் இவர்களுக்கு எந்த சலுகையும் கிடையாது என்று சொல்லும் வட்ட, மண்டல நிர்வாகங்களே! நியாயம்தானா? நியாயம் கேட்டு, நீதிகேட்டு கேங்மேன் பணியாளர்களே சென்னைக்கு வாருங்கள் ஜுன் 10-ல்

கேங்மேன் பணியாளர்களுக்கு எதிர்காலம் இல்லை, கேங்மேன் பணியாளர்கள் களஉதவியாளர்களாக மாற முடியாது என்று ஒரு சிலர் சொல்வதை பொய்யாக்க ஒற்றுமை கட்டி சென்னைக்கு வாரீர் களஉதவியாளர்களாக நீங்கள் மாறுவது காலத்தின் கட்டாயம். கேங்மேன் ஊழியர்களுக்கு களஉதவியாளர் பதவி பெற்று தராமல் மத்திய அமைப்பு ஓயாது.

ஊர் மாற்றல் என்பதும் பயிற்சி காலம் குறைப்பது என்பதும் நமது அவசர கோரிக்கை, அவசிய கோரிக்கை, கோரிக்கைகள் நிறைவேற கோடிக்கைகளாய் இணைந்து சென்னை நோக்கி புறப்படுவோம் உங்களது கோபத்தையும், வேகத்தையும் மின்வாரியம் தலைமையகம் முன்பாக முழக்கங்களாய் ஆர்ப்பரித்து வாரியத்தின், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்திடுவோம் கோரிக்கைகள் வென்றிடுவோம்.

**போராடாமல் எதுவும் கிடைப்பதில்லை**
**போராட்டமே அனைத்திற்கும் தீர்வு!**

**- தி.ஜெயசங்கர்**

# தென்சென்னை I மின் வட்ட கிளை மாநாடு

தென்சென்னை மின்வட்ட கிளையின் 16வது திட்ட மாநாடு 14.05.2022 அன்று கிண்டி சிஐடியு அலுவலகத்தில் கிளை தலைவர் தோழர் கே.தரணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிஐடியு கொடியை மாவட்ட பொருளாளரும், மத்திய அமைப்பின் முன்னாள் நிர்வாகியுமான தோழர் ஏ.பழனி அவர்கள் ஏற்றிவைத்தார். தோழர் விஜயபாஸ்கர் வரவேற்புரையாற்றினார். மாநாட்டை துவக்கி வைத்து மாநில துணை தலைவர் தோழர் என்.பால்ராஜ் உரையாற்றினார். வேலை அறிக்கையை கிளையின் செயலாளரும், மாநில நிர்வாகியுமான தோழர் ஏ.முருகானந்தம் சமர்ப்பித்தார். வரவு-செலவு அறிக்கையை தோழர் டி. பண்டாரம் பிள்ளை முன்வைத்தார். பிரதிநிதிகள் விவாதத்திற்கு பின்பு தொகுப்புரை வழங்கப்பட்டது. மாநாட்டை வாழ்த்தி சிஐடியு மாவட்ட செயலாளர் தோழர் பாலகிருஷ்ணன், TNPEO மாநில பொருளாளர் தோழர் ஆதன் இளங்கீரன், மத்திய அமைப்பின் துணைத் தலைவர் தோழர் விஜயலட்சுமி, ஓய்வுபெற்றோர் நல அமைப்பின் நிர்வாகி தோழர் பங்குனியார், தோழர் அன்பழகன் கிளை செயலாளர், தென் சென்னை-2, தோழர் தேவகுமார் கிளைசெயலாளர்/ செங்கற்பட்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாநாட்டை நிறைவு செய்து மத்திய அமைப்பின் துணை பொதுச்செயலாளரும், TNPEO பொதுச்செயலாளர் தோழர் கே. அருள்செல்வன் நிறைவுரையாற்றினார்.

புதிய நிர்வாகிகள்
வி. விஜயபாஸ்கர்
தலைவர்
டி. பண்டாரம்பிள்ளை
செயலாளர்
குமார்
பொருளாளர்

**உங்களுக்கு தெரியுமா?**

கோவிட் காலத்தில் பெற்றோர்களை இழந்த குழந்தைகள் வாழ்வாதாரத்திற்காக இன்னும் துன்பம் வருகிறது. இரண்டாம் அலை முடிந்தும் இந்த குழந்தைகளின் எதிர்காலம் கல்வி, காப்பாற்ற ஓன்றிய மோடி அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.



# காஞ்சிபுரம் கிளையின் 14வது மாநாடு

காஞ்சிபுரம் இந்த கிளையின் 14வது மாநில மாவட்ட மாநாடு 15 5 2022 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாக செங்கொடி கிளையின் மூத்த தலைவர் பிஎம் முருகேசன் அவர்கள் ஏற்றி வைத்தார். மாநாட்டிற்கு வந்தவர்களை கிளையின் இணைச் செயலாளர்கள் ஒருவரான வெங்கடேசன் வரவேற்றார். அஞ்சலி தீர்மானத்தை கிளையின் தலைவர்களில் ஒருவரான கேசவன் முன்மொழிந்தார்.

கிளை மாநாட்டை துவக்கி வைத்து சிஐடியு மாவட்ட செயலாளர் தோழர் முத்துக்குமார் சிறப்புரையாற்றினார். வேலை அறிக்கையை தோழர் டி.ஸ்ரீதர் அவர்களும் வரவு செலவு அறிக்கையை தோழர் ஜி. படவேட்டான் அவர்களும் முன்வைத்தனர். வந்த விவாதங்களின் பின்னர் தொகுப்புரை வழங்கப்பட்டது. கிளை மாநாட்டை வாழ்த்தி தோழர் முருகானந்தம் மண்டல செயலாளர் தெற்கு மண்டலம் அவர்களும் மாநில துணைத் தலைவர் தோழர் எஸ் பால்ராஜ் அவர்களும் வாழ்த்திப் பேசினர்.

மாநாட்டின் சிறப்புரையாக வேலூர் மண்டல செயலாளர் தோழர் கோவிந்தராஜ் சிறப்புரை ஆற்றினார். நிறைவாக மத்திய அமைப்பின் மாநில பொதுச்செயலாளர் தோழர் எஸ் ராஜேந்திரன் உரையாற்றி மாநாட்டை நிறைவு செய்தார். தோழர் மதியழகன் நன்றியுரை ஆற்ற மாநாடு நிறைவு பெற்றது.

## புதிய நிர்வாகிகள்

தலைவர்
தோழர் சு.மதியழகன்
செயலாளர்
தோழர் ஜி பட வேட்டான்
பொருளாளர்
தோழர் பி. கேசவன்
துணைத் தலைவர்களாக
ஆர் பாபு, ஆர். சங்கர் ,எஸ். பஞ்சாட்சரம், சஞ்சீவி, பூபாலன்
இணைச் செயலாளராக
ஏ வெங்கடேசன், பாலசுப்பிரமணி, ராமமூர்த்தி, கே சங்கர் செல்வராஜ்



## மத்திய அமைப்பின் தென்சென்னை 2

# கிளையின் ஆண்டு பேரவை

29.5.2022 அன்று கிண்டியில் தோழர் எம். தண்டபாணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து மண்டலச் செயலாளர் எம். முருகானந்தம் சிறப்புரை ஆற்றினார். முன்ன தாக சங்க கொடியை முன்னாள் மாவட்ட செயலாளரும், மத்திய அமைப்பின் முன்னாள் செயலாளருமான தோழர் எஸ். அப்பனு அவர்கள் ஏற்றி வைத்தார். செயலாளர் அறிக்கையை டி. அன்பழகன் அவர்களும், பொருளாளர் அறிக்கையை ஜி. ரவி அவர் களும் முன்வைத்தனர். விவாதங் களுக்கு தொகுப்புரை வழங்கப்பட்டது. மாநாட்டை வாழ்த்து தோழர் பாலகிருஷ்ணன், தென் சென்னை மாவட்ட செயலாளர் சிஐடியு, ஆதன் இளங்கீரன் மாநில பொருளாளர், மின்துறை பொறியாளர் அமைப்பு. ஏ. பழனி மாவட்ட பொருளாளர் சிஐடியு, டி. பண்டாரம் பிள்ளை தென்சென்னை கிளை 1 செயலாளர்,. டி. தேவகுமார், கிளைச் செயலாளர் செங்கல்பட்டு ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநாட்டை நிறைவு செய்து மத்திய அமைப்பின் மாநில செயலாளர் எம். தயாளன் நிறைவுரை ஆற்றினார்.

**புதிய நிர்வாகிகள்**

தலைவர் தோழர் **எம். தண்டபாணி**, செயலாளர் தோழர் **பி. கௌதம்**

பொருளாளர் தோழர் **ஈ. முருகன்**





## தேனி கிளையின் ஆண்டு பேரவை

மத்திய அமைப்பின் தேனி கிளை மாநாடு 29.05.2022 அன்று எஸ். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து மத்திய அமைப்பின் மாநில துணைத் தலைவர் ஆர். குருவேல் பேசினார்.

மத்திய அமைப்பின் தலைவர் டி. ஜெய்சங்கர் நிறைவுரை ஆற்றினார்

புதிய நிர்வாகிகள்

தலைவர் **எஸ். ராமச்சந்திரன்,**

செயலாளர் **ஏ. தேவராஜ்,**

பொருளாளர் **ஆர். பாலகிருஷ்ணன்.**

## மதுரை புறநகர் கிளையின் ஆண்டு பேரவை

மதுரை புறநகர் கிளையின் மாநாடு 29.05.2022 அன்று ஏ. வீரணன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து மண்டலச் செயலாளர் எஸ். உமாநாத் அவர்கள் பேசினார். மத்திய அமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் கே. ரவிச்சந்திரன் நிறைவுரை ஆற்றினார்.

புதிய நிர்வாகிகள்

தோழர் **எஸ். திருமுருகன்,** தலைவர்

தோழர் **சி. செல்வராஜ்,** செயலாளர்

தோழர் **சுரேஷ்குமார்,** பொருளாளர்

## மத்திய அமைப்பின் தேனி கிளையின் ஆண்டு பேரவை




## மத்திய அமைப்பின் மதுரை கிளையின் ஆண்டு பேரவை




## மத்திய அமைப்பின் ஈரோடு உற்பத்தி கிளையின் ஆண்டு பேரவை




## மத்திய அமைப்பின் சிவகங்கை கிளையின் ஆண்டு பேரவை



Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 9.06.2022




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian